பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir Kalaikkathir


விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 19 சனிக்கிழமை 04.09.2021 கதிர் 303

### இது ரகசியம் அல்ல!

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் இம் மாதம் 13ஆம் திகதி – இன்னும் 9 நாள்களில் – கூடுகின்றது. இம் முறையும் கொவிட் பரம்பல் நெருக்கடியை ஒட்டி இந்த அமர்வின் பல பகுதிகளும் மெய்நிகர் முறைமையிலேயே நடைபெறும் பக்கம்02

## அடங்க மறுக்கும் கொரோனா; செப். 13 வரை ஊரடங்கு நீடிப்பு

### கோட்டா தலைமையிலான கூட்டத்தில் தீர்மானம்



இலங்கையில் தற்போது அமுலில் இருக்கும் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் மேலும் ஒரு வார காலத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் 13 ஆம் திகதி அதிகாலை 4 மணி வரையில் ஊரடங்கு நீடிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் பரவல் அதிகரிப்பு நிலைமையைக் கருத்தில்கொண்டு ஊரடங்கு நீடிக்கப்பட்டுள்ளது. 2

## நிபுணர்களின் பரிந்துரையை உதாசீனம் செய்யவே முடியாது


### ஊரடங்கு நீடிக்க இதுவே காரணம் என்று கூறுகிறார் சவேந்திர சில்வா



முன்னதாக தற்போது அமுலில் உள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டத்தை எதிர்வரும் 6ஆம் திகதி தளர்த்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், வைத்தியர்கள் உள்ளிட்ட சுகாதார நிபுணர்களின் பரிந்துரைகளுக்கு அமையவே, அதனை நீடிக்கத் 2

# மக்களை அடக்கி ஆள்வதற்கே அவசரகாலச் சட்டம் பிரகடனம்

## கோட்டா மீது சீறிப் பாய்கின்றார் விக்கி



தமக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழ ஆயத்தமாகின்றார்கள் என்பதை அறிந்துகொண்டு அவர்களை அடக்கி ஆள அவசரகாலச் சட்டத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உபயோகித்துள்ளார். இது சர்வாதிகாரத்துக்கு முக்கிய படி என்பதில் எந்தவித ஐயமும் இருக்க முடியாது.

– இவ்வாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் நேற்று விடுத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளார். 2

## வவுனியாவில் நேற்று 148 பேருக்குத் தொற்று

### மேலும் இருவர் மரணம்

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் நேற்று 148 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதுடன் இருவர் மரணமடைந்துள்ளனர் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கோவிட் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் 2

## மேலும் பலி 202 தொற்று 3,644

நாட்டில் மேலும் 202 பேர் கொரோனாத் தொற்று நோயால் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள் ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

இதன்மூலம் 10ஆவது நாளாக 200 இற்கும் மேற்பட்டோர் ஒரே நாளில் உயிரிழந்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

2020 ஜனவரி தொடக்கம் நேற்றுமுன்தினம் வரை 9 ஆயிரத்து 806 பேர் 2

## யாழில் நேற்றும் அறுவரை காவுகொண்டது கொரோனா

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மேலும் 6 பேர் கொரோனாத் தொற்றால் நேற்று உயிரிழந்துள்ளனர்.

அவர்களில் ஒருவர் கைதடி அரச முதியோர் இல்லத்தில் பராமரிக்கப்பட்ட 82 வயதுடைய முதியவர் என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற மாங்குளத்தைச் சேர்ந்த 79 வயதுடைய ஆண் ஒருவரும், கச்சேரி நல்லூர் வீதியைச் சேர்ந்த 71 வயதுடைய பெண் ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

கரவெட்டி, கரணவாயைச் சேர்ந்த 52 வயதுடைய ஆண் ஒருவர் மந்திகை 2

## யாழ்.மாவட்டத்தில் 9 ஆயிரம் குடும்பங்களுக்கு 2000 ரூபா கொடுப்பனவு வழங்கப்படவில்லை!

(ந.லோகதயாளன்)

இரண்டாயிரம் ரூபா கொடுப்பனவு யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இதுவரை 9 ஆயிரம் குடும்பங்களுக்கு வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஊரடங்கு காலத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கான 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவு யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 27 ஆயிரம் குடும்பங்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ள போதிலும் மேலும் 9 ஆயிரம் குடும்பங்களுக்கு வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது நாட்டில் 10

## இங்கு சர்வாதிகார இராணுவ ஆட்சி!

### மாவை சாடல்

(இ.கலையமுதன்)

கொரோனா வைரஸ் தடுப்புக்கு இராணுவத்தைப் பயன்படுத்துவது நல்லதுதான். அதே வேளை எல்லாத்துறையிலும் குறிப்பாக 10

## யாழில் 24 மணிநேரத்தில் 370 பேருக்குக் கொரோனா

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நேற்று மாலை 4 மணிவரையான கடந்த 24 மணிநேரத்தில் 370 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அறிக்கையிடப்பட்டுள்ளது.

அவர்களில் 31 பேர் பி.சி.ஆர். பரிசோதனையிலும், 339 பேர் அதிவிரைவு அன்டிஜன் பரிசோதனையிலும் கண்டறியப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 133 பேரும், கரவெட்டி சுகாதார 2

## தனிக் கட்சிகளாகச் செயற்படுவது தமிழர்களைப் பலவீனப்படுத்துமாம்

### முன்னாள் எம்.பி. மாவை கூறுகின்றார்



(இ.கலையமுதன்)

தமிழ் மக்களுடைய விடுதலைப் போராட்டத்தில் நாங்கள் தனித்தனியாகப் பிளவுபட்டு தனித்தனிக் கட்சிகளாகச் செயற்படுவது எங்களைப் பலவீனப்படுத்திவிடும்.

– இவ்வாறு தமிழரசுக் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா தெரிவித்தார். 10

## மருத்துவ அனுமதி கிடைத்தவுடன் பாடசாலை மாணவர்களுக்கு பைசர்

மருத்துவ வல்லுநர்களின் அனுமதி கிடைத்தவுடன் பாடசாலை மாணவர்களுக்குப் பைசர் தடுப்பூசி போட முடியும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அடுத்த இரண்டு வாரங்களுக்குள் 20 – 29 வயதுக்குட்பட்டோருக்கான தடுப்பூசியை முடிக்க வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

நேற்றுக் காலை நடைபெற்ற கொரோனாத் தடுப்புச் செயலணிக் குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இதனைத் தெரிவித்தார். 2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதிலும் இலங்கை விடயம் பெரும்பாலும் இரண்டாம் வார இறுதியில்தான் நடைபெறும் எனக் கூறப்படுகின்றது.

இலங்கை விவகாரத்தைப் பொறுத்தவரை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் வாய்மூல அறிக்கையும், அதற்கு இலங்கையின் பிரதிபலிப்பும்தான் இம்முறை. அவற்றுக்கு மேல் பெரிதாக எதுவும் இல்லை.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கை தொடர்பான அவதானிப்பு அறிக்கை வாய்மூலமாக வெளிவரும். அது இம்முறை இலங்கை ஆட்சிப்பீடம் தொடர்பாகக் காட்டமான விடயங்களைக் கொண்டிருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அந்த அறிக்கை கூட உள்நிர்வாக மட்டத்தில் ஏற்கனவே தயாராகிவிட்டு எனக் கூறப்படுகின்றது. கடைசி நேரத்தில் ஏதேனும் முக்கிய விடயங்கள் அரங்கேறி, அவை ஏதும் மேலதிகமாகச் சேர்க்கப்படவேண்டிய தேவை ஏற்பட்டாலன்றி அந்த அறிக்கையில் புதிதாக - இனிமேல் - ஏதும் சேர்க்கப்படுவதற்கு வாய்ப்பு இல்லை என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

எனவே, இந்த ஜெனிவா அமர்வை ஒட்டி தமிழ்க் கட்சிகள் எல்லாம் சேர்ந்து பொது நிலைப்பாடு ஒன்றை எடுத்து, அதனை எழுத்துருவில் ஜெனிவாவுக்கு இம்முறை அனுப்புவதில் அர்த்தம் ஏதும் இருப்பதாகக் கருதப்படவில்லை. அத்தகைய முயற்சி ஒன்று நடப்பதாக யாழ்ப்பாணத்தில் இருந்து கொண்டு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா ஊடகங்களுக்குக் கதை 'அளந்து' கொண்டிருந்தாலும், களத்திலோ, கொழும்பிலோ அப்படி ஏதும் முயற்சிகள் தமிழ்த் தேசியக் கட்சிகளை ஒன்றிணைத்து முன்னெடுக்கப்படுவதாகத் தகவல் ஏதும் இல்லை.

இந்த அமர்வை ஒட்டி கூட்டமைப்பினதும், தமிழ் மக்களினதும் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தி, ஓர் அறிக்கையை சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு அனுப்பி வைக்கலாம், அதில் கூட்டமைப்பின் பத்து எம்.பிக்களும் ஒப்பமிடலாம் என்று சம்பந்தன் குறிப்பிட்டிருந்தார். அதற்கு அமைய கடிதம் ஒன்றை அனுப்புவதற்கு சுமந்திரன் தயாராகி வருகின்றார். அந்தக் கடிதம் கூட இன்னும் இறுதி செய்யப்படவில்லை.

கடந்த மார்ச் ஜெனிவா அமர்வின் போது இலங்கை விடயம் குறித்து விசேடமாக விவாதிக்கப்பட இருந்து. அதனால் தமிழ்த் தேசிய கட்சிகள் எல்லாவற்றையும் ஒன்றிணைத்து, ஒத்த நிலைப்பாட்டை எடுத்து, ஏக அறிக்கை ஒன்றை அனுப்ப முடிவு செய்யப்பட்டது. கட்சித் தலைவர்களின் ஒப்பத்துடன் அது அனுப்பப்பட்டது. பொது அமைப்புகளின் தலைவர்களோடு நீதியரசர் விக்னேஸ்வரன், கஜேந்திர குமார், சம்பந்தன் போன்றோர் அதில் ஒப்பமிட்டிருந்தனர்.

தங்களின் ஒப்பம் பெறப்படாமை காரணமாகவோ, என்னவோ எம்.பிக்கள் ஸ்ரீதரன், சார்ள்ஸ் நிர்மலராஜன், கலையரசன் ஆகிய மூவரும் பிறிதொரு கடிதம் ஒன்றைத் தயாரித்துத் தாங்கள் ஒப்பமிட்டு ஜெனிவா மனித உரிமைகள் கவுன்ஸிலுக்கு அனுப்பி வைத்தனர்.

அதைத் தவிப்பதற்காகவோ என்னவோ, இம் முறை அனுப்பும் கடிதத்தில் கூட்டமைப்பு எம்.பிமார் பத்துப் பேரிடமும் ஒப்பம் பெற்று அனுப்புவோம் என்ற முடிவுக்கு சம்பந்தன் வந்துள்ளார். அப்படி வாங்கினால் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரான தாம் எம்.பியில்லாத காரணத்தினால் தனது ஒப்பத்தைப் பெறாமல் விட்டு விடுவார்களோ என்ற ஆதங்கம் மாவையருக்கு எனத் தெரிகின்றது. எனவே கூட்டமைப்பின் பத்து எம்.பிக்களுடன் பதினொன்றாவதாக மாவை சேனாதிராசாவின் ஒப்பத்தையும் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர் என்ற முறையில் பெற்று அனுப்புவோம் என சம்பந்தன் முடிவு செய்திருக்கின்றார் எனத் தெரிகின்றது.

அதேசமயம், கடந்த தடவை போல மற்றைய தமிழ்த் தேசியக் கட்சிகளின் கூட்டணிகளின் தலைவர்களுடனும் சேர்ந்து கடிதம் ஒன்றை அனுப்புவது குறித்தும் மாவை சேனாதிராசா கருத்து வெளியிட்டு வருகின்றார். ஆனால் இம்முறை அப்படி அனுப்புவதற்கான முயற்சி ஏதும் எந்தத் தரப்பினாலும் ஆரம்பிக்கப்படவுமில்லை, அத்தகைய முயற்சிகள் ஏதும் யதார்த்தத்தில் எடுக்கப்படவுமில்லை என்று விடயமறிந்த வட்டாரங்கள் உறுதியாகத் தெரிவித்தன.

தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள் எல்லாம் ஒன்றிணைந்து - ஒரே நிலைப்பாட்டில் நின்று - தேர்தல்களையும் அதே கோணத்தில் எதிர்கொண்டால், வரக் கூடிய மாகாண சபைத் தேர்தலில் ஈட்ட முடியுமான சாதக நிலைகளைக் கருத்தில் வைத்தே மாவை சேனாதிராசா இப்படி பேசுகின்றார், ஆனால் தமிழ்க் கூட்டமைப்பு அல்லாத பிற தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றித்துச் செயற்படுவதற்கான ஒழுங்குமுறை ஏதும் இப்போதைக்கு இல்லை எனக் கூட்டமைப்பின் முக்கிய வட்டாரம் ஒன்று தெரிவித்தது.

ஆக, மாவை தமது பழைய, பகல் கனவில் தொடர்ந்தும் தீவிரமாக இருக்கின்றார் என்பது மட்டும்தான் உண்மை போலும்...!

– மின்னல் –

## மக்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள தாவது:-

2243/1 அதிவிசேட வர்த்தமானி மூலம் கொரோனாவைக் காரணம் காட்டி அவசரகால நிலைமை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

உண்மையில் இவ்வாறான சந்தர்ப்பத்தில் நடைமுறைப்படுத்த வேண்டிய சட்டம் அனர்த்த முகாமைத்துவச் சட்டம். அதன் கீழ் ஒரு செயலணியை நிறுவி மருத்துவ ஆலோசனைகளுக்கேற்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். இதிலிருந்து ஜனாதிபதி ஆரம்பத்திலேயே தவறிவிட்டார். பல குற்றங்களை அவர் புரிந்துள்ளார்.

இவ்வாறான அனர்த்த முகாமைத்துவ செயலணியை இதுவரையில் நியமிக்காமை, கொரோனாவுக்கு எதிரான நட வடிக்கைகளைத் துறைசார் நிபுணர்களை வைத்து இதுவரையில் கட்டுப்படுத்தாமை, ஆயுதமேந்தி மக்களைக் கொல்லும் இராணுவத்தைக் கொரோனாவைக் கட்டுப்படுத்த நியமித்தமை, கொரோனாவைக் காரணம் காட்டி அவசரகால நிலையை ஏற்படுத்தி சர்வதிகாரத்துக்கு வித்திட்டமை எனப் பல குற்றங்களை ஜனாதிபதி புரிந்துள்ளார்.

ஏற்கனவே பயங்கரவாத் தடைச் சட்டம் அமுலில் உள்ளது. அடுத்து கொரோனாவைக் கட்டுப்படுத்த இராணுவத்தை அழைத்து அவர்கள் எங்கும் வியாபித்திருக்கின்றார்கள். மூன்றாவதாக அவசர காலச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்துள்ளார்.

தமக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழ ஆயத்தமாகின்றார்கள் என்பதை அறிந்து கொண்டு அவர்களை அடக்கி ஆள அவசரகாலச் சட்டத்தை ஜனாதிபதி உபயோகித்துள்ளார். இது சர்வாதிகாரத்துக்கு முக்கிய படி என்பதில் எந்தவித ஐயமும் இருக்க முடியாது. இராணுவம் என்றால் என்ன என்பதை இனி சிங்கள மக்கள் அறிந்து கொள்வார்கள் - என்றுள்ளது.

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளின் முடிவுகள் சில நேற்றிரவு வெளியாகின.

அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மாவட்டம் முழுவதும் கொரோனாத் தொற்று பரவல் அடைந்துள்ள நிலையில் 148 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், தொற்றாளர்களை கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைப்பதற்கும், அவர்களுடன் தொடர்புடையவர்களைத் தனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அத்துடன், வவுனியாவில் கொரோனாத் தொற்று காரணமாக இருவர் நேற்று மரணமடைந்துள்ளனர். வவுனியாவின் தேக்கவத்தை மற்றும் தாண்டிக்குளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 61 மற்றும் 76 வயதுடைய இருவரே இவ்வாறு மரணமடைந்துள்ளனர். மரணமடைந்தவர்களின் உடல்களைச் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தகனம் செய்ய சுகாதா ரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## யாழில் 24 மணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

மருத்துவ அதிகாரி பிரிவில் 66 பேரும், யாழ்ப்பாணம் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 27 பேரும், கோப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 20 பேரும், சங்கானை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 19 பேரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை, ஊர்காவற்றுறையில் 9 பேரும், நல்லூரில் 26 பேரும், சண்டிலிப்பாயில் 7 பேரும், உடுவிலில் 35 பேரும், தெல்லிப்பழையில் 7 பேரும், வேலணையில் 6 பேரும், மருதங்கேணியில் 14 பேரும், காரைநகரில் ஒருவரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த 2020 மார்ச்சிலிருந்து நேற்று மாலை வரை 13 ஆயிரத்து 310 பேர் கொரோனா நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் ஆயிரத்து 161 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 739 பேர் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

## அடங்க மறுக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

கடந்த மாதம் 20ஆம் திகதி நாட்டில் அமுல்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டம் இதற்கு முன்னர் எதிர்வரும் 6ஆம் திகதி வரையில் நீடிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், நேற்றுக் காலை ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற கொரோனாத் தடுப்புச் செயலணிக் கூட்டத்தில், தற்போதைய கொரோனாத் தொற்று நிலைமையைக் கருத்தில்கொண்டு ஊரடங்கை மேலும் ஒருவார காலத்துக்கு நீடிக்கத் தீர்மானிக்கப்பட்டது என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## மேலும் பலி 202...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

கொரோனா நோயால் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, நாட்டில் மேலும் 3 ஆயிரத்து 644 பேர் கொரோனாத் தொற்றுடன் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நாட்டில் 2020 ஜனவரி தொடக்கம் இன்று வரை 4 இலட்சத்து 51 ஆயிரத்து 373 பேர் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். 61 ஆயிரத்து 631 பேர் மருத்துவமனைகள், இடைத்தங்கல் சிகிச்சை நிலையங்கள் மற்றும் வீடுகளில் வைத்து கண்காணிக்கப்படுகின்றனர்

## நிபுணர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தீர்மானித்தோம்.

- இவ்வாறு கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவ தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

அதன்படி, எதிர்வரும் 6ஆம் திகதி வரை அமுல்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டம், எதிர்வரும் 13ஆம் திகதி அதிகாலை 4 மணி வரை நீடிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாடு பூராகவும் கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்காக மேலும் ஒரு வார காலத்துக்குப் பயணத் தடை விதிக்கப்பட வேண்டும் என வைத்தியர்கள் கொரோனாத் தடுப்புக்கான நேற்றைய கூட்டத்தில் தெரிவித்திருந்தனர் என்றும் அவர் மேலும் கூறினார்.

## யாழில் நேற்றும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

ஆதார மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார் என்று மருத்துவச் சான்றிதழ் வழங்கப்பட்டது. அவரது சடலத்தில் முன்னெடுக்கப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் தொற்றுள்ளமை கண்டறிப்பட்டது.

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் இயற்றாலையைச் சேர்ந்த 86 வயதுடைய பெண் ஒருவரும், நுணாவில் கிழக்கைச் சேர்ந்த 90 வயதுடைய பெண் ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 271ஆக உயர்வடைந்துள்ளது.

## மருத்துவ அனுமதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2020ஆம் ஆண்டில் மூன்று மாதங்களுக்கும் மேலாக நாடு மூடப்பட்டதால் நாட்டின் பொருளாதாரம் வரலாற்றில் முதல் முறையாக எதிர்மறையான திருப்பத்தை எடுத்தது.

ஒரு சிறிய பொருளாதாரம் கொண்ட நாடு என்ற முறையில், அனைத்துத் தரப்பினரும் யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு பொருளாதாரத்தைப் பாதுகாக்க முன்னேறு பொறுப்புள்ள முடிவுகளை எடுக்க வேண்டும். உலகின் பல நாடுகள் சுற்றுலாத் துறைக்குத் திறந்திருக்கின்றன.

கொரோனா நோய்த் தொற்றுப் பரவல் கட்டுப்பாட்டுத் திட்டத்துக்கு ஏற்ப சுற்றுலா நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கான சுகாதாரப் பரிந்துரைகளைச் சுகாதாரப் பிரிவுகளின் தலைவர்கள் விரைவாக வழங்க வேண்டும் - என்றார்.



காலைக்கதிர்
Kalaikkathir

# நல்லூர் கந்தனின் அருட் காட்சி இம்முறை இணையம் வழியாக!



நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த மகோற்சவம் இம்முறை கொவிட் பரவல் காரணமாக, உட்பிரகார எல்லைக்குள், பக்தி சிரத்தையுடன் நடந்தேறிக் கொண்டிருப்பது, தமிழ்க் கடவுள் கந்தசுவாமியாரின் அனுக்கிரகமேயாகும்.

வேதமும் பண்ணும் இசைக்க மிகு சைவ வேதியர் சாமரை வீச, வெண்சங்கம் ஒலிக்க, வேற்பெருமான் தினந்தோறும் அலங்காரக் கந்தனாக, அழகிய மஞ்சை தனிலே பவனி தரும் காட்சியை வீட்டிலிருந்தே பாடியும், ஆடியும், அழுதும், அரற்றியும் பரமானந்தம் அடையும் பாக்கியத்தைத் தந்த ஷண்முகனாருக்கு நாளை இரதோற்சவப் பெருவிழா.

வழமையில், அதிகாலை நான்கு மணிக்கே கோயில் உட்பிரவாகம் நிறைந்திருக்கும். ஒருபுறம் அங்கப்பிரதட்சணம் செய்யும் மற்றும் அடியழிக்கும் அடியார் கூட்டம், மறுபுறம் வசந்த மண்டபத்தில் கோலோச்சும் ஷண்முகனாரின் ஆனந்த தாண்டவத்தைக் காண கூடியிருக்கும் பக்தர் கூட்டம் ஆறு மணி கடந்து பதினைந்து நிமிடமளவில், நல்லூர் மணிக்கூட்டுக் கோபுர ஓசை தொடங்கவே, தவில் முழங்க, நாதஸ்வர இசை கூட்ட, கோயில் அத்தனை மணிகளும் ஒருசேர ஓங்கி ஒலிக்க, அந்தணர்களின் வேத பாராயணம் நடுவே, திரை விலக்க முதல் மூன்று நொடிகளுக்கு தரணி எல்லாம் உய்விக்க ஷண்முகப் பெருமான் வள்ளி தெய்வானை சமேதரராய், தீப ஒளியில் மட்டும் காட்சி தரும் அவனழகு வார்த்தைகளுக்கு அப்பாற்பட்டது.

ஆறு வேதியர்கள் ஆறுமுகக் கந்தனின் ஒவ்வொரு திசைதோறும் தீப ஆராதனை செய்ய, பக்தர்கள் அரோகரா என உள்ளம் விதிர்விதித்து, கரங்கூப்பி கண்ணீர் ததும்புவர்.

புன்னகை மாறாத குமரப்பெருமான் பட்டுடுத்தி, சர்வ அலங்கார நாயகனாக, கடம்பமும் செவ்வந்தி மாலையும் தரித்து, தனக்கே உரித்தான கம்பீரத்துடன், தூக்கிய திருவடியுடன், யோகாநிலை அமர்ந்து ஞானம் உபதேசிக்கும் நிலை காணக் கண்கோடி வேண்டும்.

வசந்த மண்டப மற்றும் கொடித் தம்ப பூசைகளைத் தொடர்ந்து, மல்லாரி ஒலிக்க, ஆறுபுறமும் வெண் சாமரை வீச, வெள்ளிச் சிங்காசனத்தில் தேவியருடன் அமர்ந்திருந்து, எண்ணிலா பக்தர்களின் தோள்களில் அசைந்து ஆனந்தத் திருநடனம் புரிந்து உட்பிரவாகத்தில் உலா வந்து, யாகசாலை பூஜைகள் ஏற்று, எம்பெருமான் தேர் ஏறிக் கோலோச்ச தன் திருக்கோபுர வாசல் கடக்கும் நேரம் அண்டமெல்லாம் வாழ்த்தும், அவனியெல்லாம் குதூகலிக்கும், செந்திலாண்டவர் வருகை கண்டு செந்தாமரைப்பூ சொரியும்.

அண்டர் கோமான் சித்திரத் தேரில் ஏறி, சிருங்காரமாய் புன்னகைத்து, பக்தர்கள் வடம் பிடித்து, ஆர்ப்பரித்து அரோகராக் கூறி வாஞ்சையுடன் அழைக்கவே, கண்களால் காதல் செய்து, கைகளில் அபயம் காட்டி, இவ்வுலகம் உய்வதற்காய் வெளி வீதி வலம்வரும் காட்சி எம் மனக்கண் விட்டு அகலாது.

கந்தப்பெருமானைத் தொடரும் அங்கப் பிரதட்சணம், அடியழித்தல், பஜனை இசைக்கும் பக்தர்கள், கற்பூரச் சட்டி ஏந்திய அடியார்கள். காவடிகள் எம் கண்ணை விட்டகலாத இனிய நினைவுகள்.

தேர் இருக்கையை அடைந்ததும், சொர்ண ஆபரண பூஜைகனாக, மரிக்கொழுந்து மாலை சாற்றி, தேரில் ஊஞ்சல் இட்டு, பாடலுடன் ஆடி அகமகிழ்ந்து, தேரை விட்டு இறங்கி, திருப்புகழ் இசைக்கக் கேட்டு, கார்த்திகைப் பெண்கள் ஆரார்த்தி செய்யவே அகம் மகிழ்ந்து, பூரித்து, ஆனந்தக் கூத்தாடி அருளும் அக் காட்சி கண்டவர் ஆர்ப்பரிப்பர், குழைவர், குதூகலிப்பார். விண்ணவர், மெய்சிலிர்த்து, போற்றித் துதிப்பர்.

ஆறிரு தடந்தோள் வள்ளல், அவனியெல்லாம் சிறக்க, தேரடி கடந்து, கோயிலுள் உட்புகவே வேதியர் அறுவர், ஷண்முக தரிசனம் காட்டி, தீபாராதனை செய்வர். தொடர்ந்து ஷண்முகப் பெருமான் ஆடி அசைந்து பக்தர்களுக்கு அருள் செய்து வசந்த மண்டபத்தை அடைவார். அங்கே -

பிராயச்சித்த அபிஷேகம் நடைபெற்று தீபாராதனையுடன் திருவிழா இனிதே நிறைவுபெறும். அடியார்கள் கண்களெல்லாம் ஆனந்தக் கண்ணீர் சொரிந்து வற்றிப் போய்விடும். அவ்வளவு அழகான பக்திபூர்வமான திருவிழா அது. இம்முறை அப்பன் ஆலயம் சென்று ஐயனைத் தரிசிக்க காலச் சூழல் இடந்தராது விட்டாலும் என்றும் எம்மனதை விட்டகலாத அந்த நினைவுகளுடன் இணைய வழி காட்சி தரும் எம்பெருமானை வீட்டிலிருந்தே பாடுவோம் பணிவோம்.

உலகம் இக்கொடிய நோயின் பிடியிலிருந்து விடுபட மனம் மொழி மெய்களால் பிரார்த்தித்துப் பணிவோம்.

வேலும் மயிலும் துணை.

**ஜனகன் முத்துகுமார்**
(சட்டத்துறை விரிவுரையாளர்)
விழுமியப் பணிப்பாளர்,
நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்.

# தொற்றாளர்களின் எண்ணிக்கையை மறைக்கும் எண்ணம் எமக்கு இல்லை

## இராணுவத் தளபதி தெரிவிப்பு



கொவிட் உயிரிழப்புக்களின் எண்ணிக்கையைத் தம்மால் உடனடியாகக் கட்டுப்படுத்த முடியாது என கொவிட் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அதேவேளை, தொற்றாளர்களின் எண்ணிக்கையை மறைக்கும் நோக்கும் தமக்குக் கிடையாது என்றும் அவர் குறிப்பிட்டுள் ளார்.

ஊடகமொன்றுக்கு பிரத்தியேகமாகக் கருத்து தெரிவிக்கும் போது அவர் இந்த விடயத்தைக் கூறியுள்ளார். மேலும் தெரிவிக்கையில் -

நாள்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்டவர்களைக் கொவிட் தொற்று தாக்கினால் அவர்கள் தொற்றிலிருந்து தப்புவது கடினம். நாள்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்டவர்களும் 65 வயதுக்கு மேற்பட்டவர்களுமே கொவிட் தொற்றால் அதிகம் உயிரிழக்கின்றனர். என்ற போதும், சகல தரப்பினரும் தடுப்பூசிகளைப் பெற வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

# தனிமைப்படுத்தல் மீறல் 577 பேர் கைதாகினர்

சுகாதார அமைச்சினால் பிறப்பிக்கப்பட்ட தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டுக்காக நேற்று காலை 6 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணிநேரப் பகுதியில் மொத்தம் 577 நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த குற்றச்சாட்டுக்காக கடந்த ஒக்டோபர் 30 முதல் இதுவரையான காலப் பகுதியில் மொத்தம் 63,908 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதனிடையே மேல் மாகாணத்தில் உள்நுழையும் மற்றும் வெளியேறும் பகுதிகளில் நேற்று 994 வாகனங்களில் பயணித்த 1,796 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். மாகாணங்களுக்கு இடையேயான பயணத் தடை அமல் படுத்தப்பட்டதிலிருந்து, வாகனங்களை ஆய்வு செய்ய மேற்கு மாகாணத்தின் 13 நுழைவு மற்றும் வெளியேறும் இடங்களில் வீதித் தடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளன.

# நியூசிலாந்தில் தாக்குதலை நடத்திய இலங்கையர் பொலிஸாரால் சுட்டுக் கொலை!




நியூசிலாந்தில் உள்ள பல்பொருள் அங்காடி ஒன்றில் மக்கள் மீது தாக்குதலை நடத்திய ஒருவர் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். பொலிஸாரின் தீவிர கண்காணிப்பில் இருந்த குறித்த நபர் ஐ.எஸ். அடிப்படைவாத கொள்கைகள் கொண்ட இலங்கையர் எனவும் இது தீவிரவாதத் தாக்குதல் எனவும் பிரதமர் ஜெசிந்தா ஆர்டெர்ன் தெரிவித்துள்ளார்.

இஸ்லாமிய அடிப்படைவாத இயக்கமொன்றின் கொள்கைகளைக் கொண்டிருந்த அவரின் பெயரை வெளியிட நியூசிலாந்து விரும்பவில்லை என்றும் சர்வதேச தெரிவுகள் தெரிவிக்கின்றன.

2011 ஆம் ஆண்டு நியூசிலாந்து சென்றுள்ள குறித்த நபர் 2016 ஆம் ஆண்டு முதல் நியூசிலாந்தின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக விளங்கியவராக கருதப்பட்டுள்ளார்.

அவரது சித்தாந்தம் குறித்த கவலைகள் காரணமாக தீவிர கண்காணிப்பு வலயத்தில் இருந்த குறித்த இலங்கையர் மக்கள் மீது தாக்குதலை நடத்தி 6 பேரை படுகாயமடையச் செய்துள்ளார். எனினும், ஆறு பேர் காயமடைவதற்கு முன்பு ஏன் அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்ற கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன.

**இறைச்சிக் கோழி விற்பனை**

புறோய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.



U.S.A பாம்

குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தொடரும் சீன யாசகம்

**இலங்கையின் சீன யாசகம் தொடர்கதையாகத் தொடர்கின்றது. அதாவது சீனா விரிக்கும் கடன்வலை என்ற பொறியில் வசமாக இலங்கையைக் கொண்டு போய் மாட்ட வைக்கும் கைங்கரியத்தை 'ராஜபக்ஷக்கள் அண்ட் கோ' தொடர்ந்தும் கனகச்சிதமாக நிறைவேற்றிக் கொண்டு வருகின்றது.**

**அந்த வரிசையில் நான்கு நாள்களுக்கு முன்னரும் கடன் வாங்கும் – பிச்சை எடுக்கும் – அத்தியாயம் ஒன்று அரங்கேறியுள்ளது.**

**இலங்கை – சீன நாடாளுமன்றப் பிரதிநிதிகளுக்கு இடையிலான கலந்துரையாடல் என்ற பெயரில் உயர் மட்டத்தில் மெய்நிகர் முறைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே இந்தத் தண்டல் நடவடிக்கை – நகர்வு – வெற்றிகரமாக முன்னெடுக்கப் பட்டிருக்கின்றது என்று கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.**

**இலங்கையின் உடனடி நிதி நெருக்கடிகளுக்கு முகம் கொடுப்பதற்காக இலங்கை – சீன மத்திய வங்கிகள் இடையே ஒன்றரை மில்லியன் டொலர் நிதிப் பரிமாற்றம் (அதாவது சுமார் 32 ஆயிரம் கோடி ரூபா நிதிக் கடன்) மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு இக்கூட்டத்தில் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை சாதகமாகப் பரிசீலிப்பதாக சீனத் தரப்பு உறுதியளித்தது என்று தெரியவருகின்றது.**

**அதாவது சர்வதேசக் கடன் கடப்பாடுகளில் – தவனைக் கட்டணக் கொடுப்பனவுகளில் – சீனாவுக்குக் கொடுக்க வேண்டிய தவணைக் கட்டணத்தைச் செலுத்துவதற்கு சீன மத்திய வங்கியிடமே கடன் வாங்குகின்றது இலங்கை மத்திய வங்கி. கடன் தவணைப் பணக் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு அதே கடன்காரனிடம் புதிய கடன் வாங்கும் அதே முட்டாள்தனமான தந்திரம்தான். சீனா விதிக்கும் கடன்வலைப் பொறியில் – சகதியில் – இலங்கை எப்படி மண்குகமாக வீழ்கின்றது என்பதற்கு இது நல்லதோர் உதாரணம். அவ்வளவுதான்.**

**இந்தக் கடனை சீனாவிடம் பெறுதற்காக, சீனாவைத் தாஜா செய்ய வேண்டிய தேவை இலங்கைக்கு இருந்தது. அதையும் செம்மையாக நிறைவு செய்தது இலங்கைத் தரப்பு.**

**சீன அபிவிருத்தி வங்கியின் பிராந்தியத் தலைமையகத்தை கொழும்புத் துறைமுக நகரை ஒட்டி சீனா நிறுவுவதற்கான முழு ஒத்துழைப்பையும், அதற்கான உதவிகளையும் சீனாவுக்கு இலங்கை வழங்கும் என்பது உட்பட சில சாதகமான அம்சங்களை சீனாவுக்கு தருவதாக உறுதியளித்து, கடனுக்காகச் சீனாவைக் கையில் போடும் நடவடிக்கையை இலங்கைப் பிரதிநிதிகள் தரப்பு முன்னெடுத்தது என்றும் கூறப்பட்டது.**

**கொவிட் தொற்றுப் பரவலினால் முடங்கிக் கிடக்கும் இலங்கை, அதையொட்டிய பல்வேறு நெருக்கடிகளில் இருந்து மீண்டெழுவதற்கு சீனா முழு அளவிலான உதவி மற்றும் ஒத்துழைப்பை வழங்கும் என்றும் இந்தக் கலந்துரையாடலின் போது சீனத் தரப்பு உறுதியளித்தாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.**

**அமெரிக்கா பல்வேறு நாடுகளிலும் தனது செல்வாக்கையும், அதிகாரத்தையும் நிலைநாட்டுவதற்காக நேரடியாகத் தனது இராணுவ நடவடிக்கைகள், இராணுவப் பிரசன்னம் போன்றவற்றை மேற்கொண்டது; தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றது.**

**ஆனால், சீனாவோ இதற்கு மாறாகத் தனது பிராந்தியத்தை ஒட்டி, பல்வேறு நாடுகளையும் வளைத்துபோட பொருளாதாரம், வர்த்தகம், கடன் உதவி முதலிய துறைகளை மிகத் தந்திரோபாயமாகப் பயன்படுத்துகின்றது. இராணுவ ஆக்கிரமிப்பு, இராணுவப் பிரசன்னம் போன்றவையின்றியே உலக நாடுகளைத் தன் கைக்குள் வளைத்து, தன் செல்வாக்கை அதை உறுதியாக நிலைநிறுத்தி வருகின்றது.**

**தனக்கு அயலில் ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், மியன்மார், இலங்கை என்று பல நாடுகள் சீனாவின் கடன் வலையில் – யாசகப் பொறியில் – சிக்கி அடிபணிந்து விட்டன. பங்களதேஷும் இந்தா, அந்தா என்று இரண்டுங்கெட்டான் நிலையில் நிற்கின்றது.**

**பொருளாதார ரீதியில் சீனா விரிக்கும் இராஜதந்திர வலையை இந்திய இராஜதந்திரத்தினால் முறியடிக்க முடியாமல் இருப்பது இந்தியாவைப் பொறுத்தவரைப் பெரும் பின்னடைவுதான்.**

## சர்வாதிகார ஆட்சி உருவாக்கமே தற்போதைய அரசின் நோக்கம்!

### சஜித் காட்டம்



ஜனநாயகத்தை புதைத்து சர்வாதிகார ஆட்சியை உருவாக்குவதே அரசாங்கத்தின் நோக்கம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சாட்டியுள்ளார்.

ஆகவே அவசரகால சட்ட வர்த்தமானி அறிவிப்பை அரசாங்கம் திரும்பப் பெற வேண்டும் என்பதோடு நுகர்வோர் பாதுகாப்பு உரிமைச் சட்டத்தை செயற்படுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இது தொடர்பாக அறிக்கை வெளியிட்டுள்ள அவர், ஜனாதிபதியால் அவசரகாலச் சட்டம் அமுல்படுத்தப்பட்டமை மூலம் மக்களின் உரிமைகள் ஒடுக்கப்படுகின்றன எனவும் சுட்டிக்காட்டினார்.

அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரிப்பைக் கட்டுப்படுத்துவதாக குறிப்பிட்டு அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்தியுள்ளமை அவர்களின் தவறான செயற்பாடுகள் மற்றும் திறமையின்மையை மூடி மறைக்கும் தன்னிச்சையான செயற்பாடாகக் கருத வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

குறிப்பாக அவசரகாலச் சட்டத்தை அவசரமான நிலையில் பிரகடனப்படுத்தியுள்ளமை ஓர் ஆபத்தான நிலையை எடுத்துக் காட்டுவதாகக் குறிப்பிட்டுள்ள சஜித் பிரேமதாஸ, இதன் உண்மை நோக்கம் ஒரு சர்வாதிகார ஆட்சியை உருவாக்குவதாகும் என்றும் குற்றம் சாட்டினார்.

எனவே குறித்த அவசரகால சட்ட வர்த்தமானியை ஜனாதிபதி மீளப் பெற வேண்டும் என்றும் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை அமுல்படுத்தி சட்டவிரோதமாகப் பொருள்களைப் பதுக்கி வைத்திருப்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## 18 - 30 வயதிற்கு இடைப்பட்டோருக்கு தடுப்பூசியேற்றும் நடவடிக்கை ஆரம்பம்

### சுகாதார அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு



18 முதல் 30 வயதிற்கு இடைப்பட்டவர்களுக்கு தடுப்பூசியேற்றும் நடவடிக்கை கடந்த வியாழக்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த திட்டம் மாவட்ட ரீதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல அறிவித்துள்ளார்.

நாட்டில் 18 முதல் 30 வயதிற்கிடைப்பட்ட 37 லட்சம் பேருக்கு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையை விரைவுபடுத்துமாறு உரிய அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

குறித்த வயது வரம்பில் உள்ள முன்னணி சுகாதார ஊழியர்களுக்கும் 18 முதல் 30 வயதுக்கு இடைப்பட்ட சில அத்தியாவசிய சேவையாளர்களுக்கு ஏற்கனவே தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் இன்னும் மூன்று வாரங்களுக்குள் முழுமையாக தடுப்பூசி செலுத்தப்படும் என்றும், 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் ஒக்ரோபர் இறுதிக்குள் தடுப்பூசி செலுத்தப்படும் என்றும் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல அறிவித்துள்ளார்.

## உத்தரவாதமின்றி ஒக்ஸிமீற்றர் விற்பனை செய்தன மூன்று தனியார் மருந்தகங்கள்

வவுனியா, செப். 04

வவுனியாவில் பொருளுக்கான உத்தரவாதமின்றி ஒக்ஸிமீற்றர் விற்பனை செய்த மூன்று மருந்தகங்களுக்கு எதிராக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வவுனியாவில் உள்ள தனியார் மருந்தகங்களில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினர் விசேட சோதனை நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது, வவுனியா வைத்தியசாலை வீதி, கந்தசாமி கோவில் வீதி, குருமன்காடு சந்தி ஆகிய பகுதிகளில் உள்ள தனியார் மருந்தகங்களில் ஒக்ஸிமீற்றர் உத்தரவாதம் இன்றி விற்பனை செய்யப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து குறித்த மூன்று வர்த்தக நிலையங்களுக்கு எதிராகவும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, வவுனியாவில் ஒக்ஸிமீற்றர் 5 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வரும் நிலையில், ஒக்ஸிமீற்றர் ஒன்றுக்கான அதிகூடிய சில்லறை விலை 3ஆயிரம் ரூபா ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக ஔடத உற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அனைத்து நீதிபதிகளிடத்திலும் ரஞ்சன் மன்னிப்புகோர வேண்டும்!

### இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தே இப்படிக் கருத்து

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க நாட்டின் அனைத்து நீதிபதிகளிடமும் மன்னிப்பு கோர வேண்டுமென சிறைச்சாலைகள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தே தெரிவித்துள்ளார்.

அவ்வாறு மன்னிப்பு கோரினால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ரஞ்சனை விடுதலை செய்ய தீர்மானிப்பார் எனக் குறிப்பிட்டுள்ளார்.

ரஞ்சன் ராமநாயக்கவை விடுதலை செய்யுமாறு அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புக்கள், கலைஞர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

ஜனாதிபதி பொது மன்னிப்பின் அடிப்படையில் ரஞ்சனை விடுதலை செய்யுமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் கடிதம் மூலம் கோரியுள்ளார்.

நீதிமன்றை அவமரியாதை செய்த குற்றச்சாட்டின் பேரில் ரஞ்சன் ராமநாயக்கவிற்கு நான்கரை ஆண்டு கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, விரைவில் ரஞ்சனை விடுதலை செய்வது தொடர்பில் ஆராயப்பட்டு வருவதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

## எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு

அங்கம் - 65

ந.வித்தியாதரன்

சிவநாயகம் ஐயாவை யாருடனும் ஒப்பீடு செய்யும் நோக்கத்துடன் இன்றைய விடயத்தை நான் எழுதவில்லை.

உண்மைகள் சுடும் என்பார்கள்; அவை கசக்கும் என்பார்கள். அதனால் பல சமயங்களில் அவை சொல்லப்படும் காலங்களில் எரிச்சலைத் தருவனவாக இருந்தன என்பது நம் அனுபவம். சிவநாயகம் ஐயா உண்மை சொன்ன காலங்களிலும் அதுதான் நடந்தது.

அதற்குள் இறங்க முன்னர் அண்மைக்கால அனுபவம் பற்றிய பதிவு ஒன்றை முன்வைக்க விரும்புகிறேன்.

மூத்த தமிழ் அரசியல்வாதிகளில் ஒருவர் ஆனந்த சங்கரி. தமிழரின் ஜனநாயக அரசியலில் தோற்றுப் போன தலைவரும் கூட. யுத்தம் முடிந்து ஆறேழு ஆண்டுகளின் பின்னர் ஒருநாள் அவரை யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியில் உள்ள அவரது தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில் சந்தித்தேன். எப்போதும் என்னை மதித்து மனம் திறந்து பேசுவார்.

அன்று அவரிடம் நான் ஒரு கேள்வி கேட்டேன். அவர் பதில் கூற முடியாமல் விக்கித்து போய் நின்றார்.

*"ஐயா 2001ஆம் ஆண்டின் பின்னர் அனேகமாகத் தமிழ்த் தலைவர்கள் எல்லாம் விடுதலைப் புலிகளின் பின்னால் அணிவகுத்து நின்ற போதும், நீங்கள் மட்டுமே முரண்டு பிடித்தீர்கள். தலைவர் பிரபாகரனின் தலைமையில் மீட்சி உறுதி என்று நாம் எல்லோரும் வலியுறுத்திய போது, நீங்கள் மட்டுமே வேறுபட்டு நின்றீர்கள். அக்காலத்தில் நீங்கள் தலைவர் பிரபாகரனுக்கு எழுதிய கடிதங்கள் இவற்றுக்குச் சான்று. ஒரு தடவை அந்தக் கடிதங்களை எடுத்துப் புரட்டிப் பாருங்கள். 'தம்பி! உன் பிடிவாதப் போக்கால் நீ அழியப் போகிறாய்!அதனால் இயக்கத்தை அழிக்கப் போகின்றாய்! அதோடு மக்களும் அழியப் போகிறார்கள்! தமிழர் தாயகம் அழியப்போகின்றது! போதும், போதும், நிறுத்து தம்பி!' - என்றுதானே உங்கள் கடிதங்கள் எல்லாம் இருந்தன...?"* - என்றேன் நான்.

அவர் 'ஆமாம்', 'ஆமாம்', 'சரி' என்று தலையசைத்தார்.

*"நீங்கள் கூறியவைதான் கடைசியில் நடந்திருக்கின்றன. அப்படியானால் உங்களைத் தமிழினம் இந்தப் போர் முடிவுக்கு பின்னராவது தீர்க்கதரிசி என்று தானே போற்றியிருக்க வேண்டும்? அப்படிச் செய்யவில்லையே. 'துரோகி' என்ற மாதிரி அடையாளப்படுத்தி ஒதுக்கித் தள்ளி அல்லவா வைத்திருக்கிறது...?"* - என்றேன் நான். அவர் அதை ஒப்புக் கொண்டார்

*"உங்களைப் போன்ற ஊடகவியலாளர்களும், மக்களுக்கு உருவேற்றிய தமிழ் அரசியல்வாதிகளும் என்னைக் குறித்து அப்படி ஒரு பிழையான படத்தை போட்டு மக்களை நம்ப வைத்து விட்டனர். உண்மையை மறைத்து விட்டனர்"*என்று குறிப்பிட்டு குற்றச்



ஆனந்த சங்கரி

சாட்டுத் தட்டை என் பக்கம் திருப்பினார் சங்கரி ஐயா.

நான் அதை மறுக்கவில்லை.

*"என்றாலும் யுத்தம் முடிந்த பிறகாவது மக்கள் உங்களின் தீர்க்கதரிசனத்தை மெச்சியிருக்க வேண்டும் அல்லவா? மெச்சவில்லையே? ஏன் தெரியுமா?"* - என்று கேட்டேன். அவர் என் பதிலை எதிர்பார்த்தார்.

*"யுத்தம் முடியும் முன்னர் நீங்கள் வெளிப்படையாக கூறியவை எல்லாம் அப்போது சம்பந்தனுக்கும் தெரியும். அவருக்கும் அது புரிந்திருந்தது. ஆனால் அவர் வெளிப்படையாக அவற்றைக் கூறவில்லை; கூற முன்வரவில்லை."* - என்றேன் நான்.



அவர் அதை ஆமோதிப்பது போன்று வேறு ஒரு கருத்தைச் சொன்னார்.

*"ஆமாம். அது சம்பந்தனுக்கும் தெரியும். என்னுடன் கூட்டணியில் இருந்தபோது எனக்கு அதைச் சம்பந்தனே நேரடியாகக் கூறியிருக்கின்றார். 'சங்கரி நீர் சொல்வதெல்லாம் எங்களுக்கும் தெரியும். ஏன் அதை வெளிப்படையாக பேசி நிலைமையை குழப்புகின்றீர்கள். நாங்கள் வெளிப்படையாகப் பேசாமல் வாயை மூடிக் கொண்டிருப்பது போல நீரும் வாயை மூடிக் கொண்டிரும். உமக்கு அரசியல் விளங்கவில்லை' என்று என்னைக் கூட்டணிக் கூட்டங்களிலேயே திட்டி இருக்கின்றார்"* - என்றார் சங்கரி.

*"ஆமாம் ஐயா. அதுதான் அரசியல். எதை, எந்த நேரத்தில், எப்படி பேசுவது, எதை உண்மை என்று தெரிந்தும் வெளியே பேசாமல் அமுக்கி கொண்டிருப்பது என்பவையெல்லாம் அறிந்து அரசியல் செய்தால் தான் நல்ல பெயர் எடுக்கலாம். அது உங்களுக்குத் தெரியவில்லை. அதனால் நீங்கள் யதார்த்தம் பேசியும் தோற்றுப்போன அரசியல்வாதியாகி விட்டீர்கள். விடயம் தெரிந்ததால் - புரிந்ததால் - சம்பந்தன் போன்றோர் பிழைத்துக் கொண்டனர்"* - என்றேன் நான்.

அவர் நான் கூறியவற்றை விளங்கியும் விளங்காதமை போலவும் தலையசைத்துக் கேட்டுக்கொண்டார்.

இதுதான் ஈழத் தமிழ் அரசியல் யதார்த்தம். அடிக்கின்ற காற்றுக்கு ஏற்றவாறு அசைந்து கொடுத்து, நின்றால்தான் தப்பிப் பிழைக்கலாம் என்பதை கற்று தேர்ந்தவர்கள்தான் இன்று வெற்றிகரமான அரசியல்வாதிகள்.

யதார்த்தம் எதுவாக இருந்தாலும், கொள்கைப் பற்றில் உறுதியாக நின்ற தலைவர் பிரபாகரனாலும் தாக்குப் பிடிக்க முடியவில்லை, மறுபக்கத்தில் அதை வெளிப்படையாகப் பேசி விமர்சித்த சங்கரிக்கும் இடமில்லை. இரண்டு பக்கமும் வளைந்து கொடுத்து, மீனுக்குத் தலையையும், பாம்புக்கு வாலையும் காட்டியவர்கள் இன்றும் நமது தேசியத் தலைவர்களாக மிளிர்கின்றார்கள். இதுதான் நமது தமிழ் தேசியஅரசியலின் இழி நிலைமை.

இதன் ஆரம்பம் இன்று நேற்றல்ல, அறுபது, எழுபதுகளில் தொடங்கி விட்டது.

தமிழ் இளைஞர்களுக்கு உசுப்பேற்றும் தமிழ் அரசியல்வாதிகள், அதனைத் தங்களது வாக்கு அரசியலுக்கே செய்கின்றார்கள், தமிழ் இளைஞர்களுக்கு அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தி, அதனூடாக ஒரு விடுதலைப் பயணத்தை முன்னெடுப்பதை விடுத்து, உணர்ச்சி அரசியலுக்காக - தங்களது பதவி சுகத்திற்காக, வாக்குகளுக்காக நடத்தப்படும் உசுப்பேற்றல் இது என்றெல்லாம் முதன்முதலில் ஊடகப் பரப்பு மூலம் தமிழ் மக்களுக்கு விழிப்பூட்டி எச்சரிக்க முயன்றவர் எஸ்.டி.சிவநாயகம் ஐயா.

அவர் அப்போது சொன்ன - அம்பலப்படுத்திய - உண்மை கசப்பாக இருந்தது. அந்த நிஜம் பலரையும் சுட்டது. அதனால் ஊடகத்துறையில் அவர் 'துரோகி' யாக சில தரப்பினரால் விமர்சிக்கப்பட்டார். ஆனால் அவர் அன்று எச்சரித்த பல விடயங்களை நாம் பின்னாள்களில் நேரில் கண்டோம்.

அகிம்சைப் போராட்டத்தின் மூலம் தமிழர் விடுதலையை முன்னெடுப்பதாகக் கூறி அதன் வாயிலாக பதவி சுகம் கண்டவர்களிடம் எமது விடுதலைப் போராட்டம் தொடர்பில் தீர்க்கதரிசனமான பார்வையும், தெளிவான திட்டமும், உருப்படியான வழிப்பாதையும் இருக்கவில்லை. வெறும் உணர்ச்சியூட்டும் உசுப்பேற்றல் மட்டுமே இருந்தது.

அவர்களின் செப்படி வித்தைதனமான அகிம்சைப் போராட்டம் அந்தப் பாதை மீது இளைஞர்களுக்கு நம்பிக்கையை இழக்க வைத்தது. அதேசமயம் அந்த தலைவர்களின் உசுப்பேற்றல்கள் இளைஞர்களை உணர்ச்சியின் - சீற்றத்தின் - எல்லைக்குக் கொண்டு போய்விட்டன.

இந்த மோசமான நிலை ஏற்படும் என்பதைத்தான் சிவநாயகம் ஐயா முன்கூட்டியே எச்சரிக்க முற்பட்டார். அவர் சுட்டிக்காட்டிய உண்மையில் பொதிந்திருந்த சத்தியத்தீ பலரைச் சுட்டது. வழமைபோல தமது வாயாடித்தனத்தால் அரசியல் செய்த இந்த அரசியல்வாதிகள் அந்தச்சூட்டுத் தகிப்பில் இருந்து தப்புவதற்காக அதைச் சுட்டிக்காட்டிய சிவநாயகம் ஐயாவை துரோகி என்று பட்டம் கட்டினர்.

சரியான அரசியல் விழிப்புணர்வு பெறாமல், உரிய பாதை வகுக்கப்படாமல், இளைஞர்கள் உணர்ச்சியூட்டப்பட்டமையாலேயே ஒரே விடுதலைப் போராட்டத்திற்காகப் பல்வேறு இயக்கங்கள் தோன்றி, ஒன்றுடன் ஒன்று இடர்பட்டு, மோதி, உள்பகையால் பேரழிவைச் சந்தித்து, பேரிழப்புக்களின் பின்னர்தான் நம்மால் ஒரே சக்தியாக எழுந்து நிற்க முடிந்தது.

இந்தப் பின்னடைவுக்கு, வெறும் உணர்ச்சியூட்


சம்பந்தன்

டும் எழுச்சியை மட்டும் ஏற்படுத்தி, அதில் அரசியல் செய்த நமது அந்தத் தலைமுறை தலைவர்களே காரணம் என நான் நினைக்கிறேன்.

அந்தப் போக்கு பின்னாள்களில் தமிழினத்துக்கு கட்டு மட்டில்லா அழிவுகள் மற்றும் பின்னடைவுகளை மட்டும் தரவில்லை. அத்தகைய உணர்ச்சி எழுச்சியில் அரசியல் நடத்த எத்தனித்த அந்தத் தலைவர்களுக்கும் கூடப் பேராபத்தாக வந்து முடிந்ததை நாம் கண்டோம்.

உணர்ச்சி அரசியலின் எழுச்சி இத்தகைய மோசமான பின்னடைவுகளை - விளைவுகளை - பாதிப்புக்களை - தரும் என்பதை ஊகித்து, அதை முன்னெடுத்த அரசியல் தலைவர்களையே சிவநாயகம் ஐயா காட்டமாக விமர்சித்தார்.

உணர்வெழுச்சியுடன் கிளம்பிய தமிழ் இளைஞர்களையோ, இனவிடுதலை மீதான அவர்களின் உணர்வெழுச்சிப் பற்றையோ அவர் என்றும் விமர்சித்தவர் அல்லர் என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

(வளரும்...)



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங் காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் - 120**

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**335. கே.பி., நெடியவன் இருவராலும் ஏதும் ஒப்பேற்றி கொள்ளக் கூடியதாக இருந்ததா?**

இருவரும் தாங்கள் ஒருவர் காலில் மற்றொருவர் சுட்டமையல்ல, தமிழ் மக்களின் தலைகளிலும் சுட் டுக் கொண்டிருந்தார்கள்.

கே.பியும் உருத்திரகுமாரனும் மக்கள் அழிக்கப் படுகின்றார்கள் என்பதை மையப் படுத்தி வெளிநாடுகளில் பேராட்டங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் நடத்த கோரியிருந்தார். மனிதாபிமானத்துக்கு எதிரான செய்கைகள் நிறுத்தப்படவேண்டும் என்பது அவர்கள் அணுகுமுறையாக இருந்தது. விடுதலை புலிகளுக்கும் வழமைபோல் பிரபாகரனின் பதாகைகளை கொண்டுசெல்வதை தவிர்ப்பது, மனித உரிமை மீறல்களையும் இன அழிப்பையும் முன்னெடுக்க அவற்றுக்கு மேற்கத் தேய நாடுகள் அக்கறை கொள்ளும் என கணிக்கப்பட்டது. ஆனால் இந்த போராட்டங்களிடையே நெடியவனின் ஆதரவாளர்கள் "விடுதலைப் புலிகள் தமிழர்களின் ஒரே ஒரு தலைவர்கள். அவர்கள் பாதுகாக்கப்படவேண்டும்" எனவும், "எங்கள் தலைவர் பிரபாகரன்" என்ற பதாகைகளையும் தாங்கிச் சென்றனர். அவர்களைத் தாங்கள் கைவிடமுடியாது என்பது அவர்களது வாதம். இவற்றினால் சர்வதேசத்துக்கு ஆர்ப்பாட்டக்காரர்கள் என்ன கேட்கின்றார் என்ற குழப்பம் இருந்தது.



விடுதலைப் புலிகளுக்கும், வழமைபோல பிரபாகரனின் பதாகைகளை கொண்டு செல்வதை தவிர்ப்பது மனித உரிமை மீறல்களையும் இன அழிப்பையும் முன்னெடுக்க அவற்றுக்கு மேற்கத்தைய நாடுகள் அக்கறை கொள்ளும் என கணிக்கப்பட்டது. அதில் இந்த போராட்டங்களிடையே நெடியவரின் ஆதரவாளர்கள் விடுதலைப் புலிகள் தமிழர்கள் ஒரே ஒரு தலைவர்கள் அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் எங்கள் தலைவர் பிரபாகரன் என்ற பதாகைகளையும் தாங்கிச் சென்றவனர் அவர்கள் தாங்கள் கைவிடமுடியாது என்பது அவர்களது வாதம் இவற்றில் சர்வசேத்துக்கு ஆர்ப்பாட்டகாரர்கள் என்ன கேட்கின்றார்கள் என்ற குழப்பம் இருந்தது.

தலைநகரங்களின் கோவில்கள், ஆலயங்களில் கூட தமக்கு வீண் பிரச்சினைகள், இந்தப் போட்டி குடம்பல்களால் வந்துவிடுமோ என்று சத்தியாகிரகத்துக்கோ உண்ணாவிரதத்துக்கும் கூட இடமளிக்கவில்லை.

போர் தொடர்ந்து முன்னேறிக் கொண்டிருக்க, இவர்கள் எல்லா மட்டத்திலும் தங்களை நிரூபிக்க எத்தனித்துக் கொண்டிருந்தார்கள். களத்திலோ மக்களதும் போராளிகளினதும் அங்கலாய்ப்புகளால் மூன்று வழிகள் ஆராயப்பட்டு கொண்டிருந்தன.

ஒன்று - சரணடைவு. இரண்டாவது - கடைசி வரைக்கும் போராடுவது. மூன்றாவது - இராணுவத்தின் சுற்றிவளைப்புகளை சில முனைகளில் முறியடித்து, கட்டங்கட்டமாக வன்னிப் பரப்புக்கு வெளியேறி, அங்கிருந்து வியூகங்களை வகுப்பது என்பன.

பிரபாகரன் இரண்டாவது வழியில்தான் பிடிவாதமாக இருந்தார். ஆனால் சில சக போராளிகளின் உணர்வுகளைக் கேட்டு விட்டுக்கொடுக்க இணங்கி, கே.பியோடு போர் நிறுத்த ஒருமைப்பாடு தங்களது அபிலாசைகளைப் பாதிக்காதவாறு ஏற்படுத்த கேட்டார்.

எங்களுக்கும் கே.பிக்கும் இடையில் செய்திகள் கொண்டு சென்றவர்களுக்கும், ஆஸ்திரேலிய அமைப்பாளர்களுக்கும் ஒன்றைச் சொன்னோம். மார்ச் 2009 இல் நோர்வேயின் முன்னேற்பாட்டுடன் மற்ற நாடுகளுடன் சேர்ந்து மக்களை விடுவிக்க வழிகளை ஆராய்ந்தபோது வைக்கப்பட்ட நிபந்தனைகளை விளங்கப் படுத்தி, மேற்கத்திய நாடுகளை மட்டும் நம்பி இருக்காமல், போராட்டங்கள் இந்திய தூதரகங்கள் முன்னும் நடத்தப்பட வேண்டும், இவை தவிர நேரடியான பேச்சுகளை தமிழ்நாட்டிலுள்ள அவர்கள் ஆதரவாளர்கள் மூலம் விடுதலைப் புலிகள் மேற்கொள்ளவேண்டும், இவை எங்களது பேச்சுவார்த்தைகளில் இந்தியத் தூதரக அதிகாரியிடம் இருந்து நாம் கணித்தவை எனக் கூறினோம். இரண்டு பகுதி ஆதரவாளர்களும் அதனை தாங்கள் நாட்டில் கேட்டு விட்டுச் செய்கிறோம் என்றார்கள். ஆனால் தொடர்ந்த போராட்டம் எதிலும் அப்படியானவை இடம்பெறவில்லை.

**336. சக போராளிகளின் உணர்வைக் கேட்டு என்றீர்களே. அவை எப்படியானவை?**



இவற்றில் பல உணர்வுகள் இருந்தன. ஆயினும் முக்கியமான இரண்டைக் குறிப்பிடுகிறேன்.

நோர்வேயின் ஏற்பாட்டிலான யுத்த நிறுத்த காலத்திலிருந்து - அதாவது 2002 தொடக்கம் - பல இளம் போராளிகள் திருமணம் செய்திருந்தார்கள். அவற்றில் பல, போராளிகளுக்கிடையே நடந்தவை காதல் திருமணங்கள். 2009 கால வரையில் இவர்களது குடும்பங்களில் சராசரி இரண்டு குழந்தைகளாவது இருந்தார்கள். மழலைஓ பருவங்களிலிருந்து ஆறு, ஏழுவரை வயதானவர்கள். அவர்கள் போராளிகளாகப் பேசாமல், பெற்றோர்களாக, தாங்கள் தங்கள் குழந்தைகளின் வாழ்வுகளுக்காக, எதிர்காலங்களுக்காக, ஒரு வழியைத் தேடவேண்டுமென்று பிரபாகரனிடம் சமர்ப்பித்தார்கள். அந்தப் பாச உணர்வை அவரால் தட்டமுடியாதிருந்தது.

அடுத்தது ஆள்சேர்ப்புக் காலங்களில் பெண் பிள்ளைகளுக்கு செய்யப்பட்ட திடீர் கட்டாய கல்யாணங்களில் விருப்பங்கள் இல்லாது குறை சொல்லி கொண்டே இருந்தவர்கள். அவர்களில் பலர் தங்களது கணவர் போராளியானாலும் தாம் அவர்களோடு நிற்க மாட்டோம், தாங்கள் வெளியேற வேண்டும் என வைத்த நிர்ப்பந்தங்கள்.

இவற்றோடு, ஈடாடிக் கொண்டிருந்த கே.பி. சர்வதேசம் எல்லோரும் மக்களை விடுவித்து, சரணாகதி அதுவும் ஶ்ரீலங்கா இராணுவத்துக்குத்தான் செய்யப்படவேண்டும் என நிற்கிறார்கள் என்ற செய்தியை பிரபாகரனுக்கு கொண்டு சென்றார்.

**337. இவற்றைப் பிரபாகரன் ஏற்றுக் கொள்ள சம்மதித்தாரா?**

மார்ச் 2009 கடைசிப் பகுதிகளில் நோர்வே முன்னெடுத்து, பலரும் - எங்களது புலம்பெயர் குழுவும் - அங்கீகரித்தவை, புலம் பெயரில் இயங்கிய விடுதலைப் புலிகளல் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஆகவே, மக்களை விடுவிப்பதும், சரணாகதி என்பதும்தான் திரும்பவும் தரப்பட, பிரபாகரன் வெகுண்டெழுந்தார். அது



நடக்க முடியாதது, தாங்களால் இராணுவத்தை சில காலங்கள் தாக்குப் பிடிக்க முடியும், ஆனபடியால் வேறு முயற்சிகளை ஏற்படுத்துங்கள் என்றுதான் அவர் கேட்டார். ஆனால் ஶ்ரீலங்கா அரசின் நிலைப்பாடும், அவர்கள் மேலைத்தேய நாடுகளின் அறிவுறுத்தலுக்கு இணங்காமையும் பேசப்பட்டபோது, பிரபாகரன் கே.பியிடம் "உனக்கும் போராட்டம் வெல்லும் என்று நம்பிக்கையில்லையா?" என்றுதான் கேட்டார். அத்துடன் கே.பி. சரணாகதி என்பதை மேலேடுக்கவில்லை.

இவை ஏப்பிரலில் 2009 இன் நடுப்பகுதிக்கு வந்துவிட்டன.

இவை கே.பியின் தொடர்பாளர்களாலும் ஆஸ்திரேலிய பொறுப்பாளர்களாலும் திரும்பவும் ஒரு போர் நிறுத்தத்துக்குச் சந்தர்ப்பம் ஏற்படுத்த ஶ்ரீலங்கா அரசை அணுகுமாறு கொண்டுவரப்பட்டது. ஆஸ்திரேலிய மட்டங்களில் கூட உட்பூசல்கள் இவற்றில் ஆங்காங்கே தலைகாட்டாமல் விடவில்லை. அவற்றில் விவரமற்ற நடவடிக்கைகளின் தாக்கங்கள் பற்றித் தவிர்த்து, முக்கியமானதை இனிக் குறிப்பிடுகிறேன்.

(வளரும்....)

‘கம்பவாரிதி’ இலங்கை ஜெயராஜ் தமது ‘உகரம்’ இணையத்தளத்தில் ‘பாட்டும் நானே! பாவமும் நானே!’ என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி – பதில் பகுதி ‘காலைக்கதிர்’ நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்கு தீனியாகிறது.

# பாட்டும் நானே? பாவமும் நானே!



**1. கேள்வி:-**

முன்பொருமுறை யாழ் பல்கலைக்கழகத் தமிழ்த் துறை பற்றிக் கேட்கப்பட்ட கேள்விக்கு ‘பாவம் தமிழ்!’ எனப் பதில் அளித்து அவர்களோடு பிரச்சினைப்பட்டீர்கள். இப்போது அதே கேள்வியை உங்களிடம் கேட்டால் உங்கள் பதில் என்னவாக இருக்கும் ?

**பதில் :-**

‘யாழ் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறை என்ற ஒன்றும் இருக்கிறதா?’ என்பதாகத்தான் இருக்கும். அது பற்றிக் கொஞ்சம் விரித்துரைக்கிறேன்.

முன்பு நான் அப்பதிலை எழுதிய போது பேராசிரியர்களான சண்முகதாஸ், சுப்பிரமணியஐயர், சிவலிங்கராஜா போன்ற ஒரு சிலராவது சமூகத்திற்குள் துறை சார்பாகத் தம்மை அடையாளப்படுத்தி நின்றார்கள். இன்று அத்துறைக்கும் சமூகத்திற்குமான தொடர்பு முற்றாக அறுந்துவிட்டது. அங்கு தமிழ்த்துறை என்ற ஒன்று இயங்குவதற்கான அடையாளத்தையே காண முடியவில்லை. சமூக அரங்கில் தமிழ் சார்ந்த விடயங்கள் பற்றி எழுதுகிற, பேசுகிற ஒருவரும் அங்கு இப்போது இருப்பதாய்த் தெரியவில்லை.

முன்பெல்லாம் பேராசிரியர்களான சு.வித்தியானந்தன், க.கைலாசபதி, கா.சிவத்தம்பி போன்றவர்கள் தமிழ்த் துறையை மட்டுமல்லாமல், யாழ் பல்கலைக்கழகத்தையே அடையாளப்படுத்துகிறவர்களாக இருந்தார்கள். இன்று, அத்தகுதியை தமிழ்த்துறை இழந்துவிட்டது. சமூகத்தின் மற்றைய நிகழ்வுகளுக்கு என்று இல்லாமல், தமிழ்மொழி சார்ந்த நிகழ்வுகளிலும் கூட தமிழ்த் துறை சார்ந்த ஒருவரினதும் ‘தலைக் கறுப்பைக்’ கூட காண முடிவதில்லை.

மற்றவர்கள் அழைத்து இவர்கள் போவதில்லையா? அல்லது இவர்களை யாருமே அழைப்பதில்லையா? என்பது பெரிய கேள்வியாக எழுந்திருக்கிறது. கூப்பிட்டு இவர்கள் போகவில்லை என்றால் அதற்கு மக்கள் முன் கருத்துரைக்கும் ஆற்றல் இவர்களுக்கு இல்லை என்பது அர்த்தம் ஆகும். இவர்களை யாரும் கூப்பிடவே இல்லை என்றால், அதற்கு இவர்களுக்கு எந்த ஆற்றலும் இல்லை என்பதே அர்த்தமாகும். இவர்கள் வெளியே வராததற்கு இவற்றுள் எது காரணமாக இருந்தாலும் அது தமிழ்த் துறைக்கு அவமானம்தான்.

பல்கலைக்கழக வளர்ச்சியைப் பேண வேண்டிய மூதவை கூட வானளவாய் விரிந்து கொண்டிருக்கும் தமிழ்த் துறையின் இந்தப் பெரிய வீழ்ச்சியைக் கூட கண்டு கொள்ளாதது பெரிய ஆச்சரியமே.

யாழ் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை என்று மட்டுமில்லை, இலங்கையின் எல்லாப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைகளும் முன்னைய பல்கலைக்கழக அறிஞர்களோடு ஒப்பிடுகையில் மிக மிகத் தரம் தாழ்ந்துதான் இருக்கின்றன.

தம்மில் தம் மக்கள் அறிவிலாமையை ஆக்கி, மாநிலத்து மன்னுயிர்க்கெலாம் துன்பம் விழைவித்த இத்துறை சார் அறிஞர்களின் மர்மச் செயல்பற்றி, ‘ஆய்வு ஆய்வு’ என்று கதறுகிறவர்கள் ஓர் ஆய்வினைச்செய்தால் நன்றாக இருக்கும். பிழைகளை இனங்கண்டு கொண்டால்தான் பிழைதிருத்தம் சாத்திமாகும்.

வால் பிடிப்பவர்களுக்கும், உறவுக்காரர்களுக்கும், ஊரவர்களுக்கும் எனத் தகுதி பாராது ‘பெஸ்ட் கிளாஸ்’ சித்திகளை வழங்கிப் பின் பதவிகளையும் அள்ளிக் கொடுத்ததன் விளைவே இந்த வீழ்ச்சிக்கான காரணமாம் என்று சமூகத்திற்குள் பரவலாய்ப் பேசப்படுகிறது.

எனது இந்தப் பதில் யாரையும் பழி தீர்க்கும் முயற்சியன்று. நம் தமிழ்த் துறை இங்ஙனமாய் இறங்கிக் கொண்டிருக்கும் இழிவு கண்ட மனக் கொதிப்பிலேயே இதனை எழுதுகிறேன். இப்பதிலால் என்னோடு பலர் கோபிப்பார்கள். முன்பும் அப்படித்தான் கோபித்தார்கள். ஆனால் பின்னர் துறையைவிட்டு வெளியே வந்த பிறகு முழுமனதோடு என்கருத்தை அவர்களே வழி மொழிந்தார்கள்.

அப்போது ‘பாவம் தமிழ்’ என்றால், இப்போதைய நிலையில் ‘பரிதாபம் தமிழ்’ என்பதுதான் பொருத்தமான பதிலாய் இருக்கும்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ ‘எப்பிடி இருந்த நான் இப்பிடி ஆயிட்டேன்’என்ற கதை தான் . ஹீ.... ஹீ ....ஹீ....**

**2. கேள்வி:-**

ஊரடங்குச் சட்டம் மேலும் நீடிக்கப்படுமா?

**பதில் :-**

நம் மக்களின் ஆயுள் நீடிப்பிற்கான விதியிருந்தால் மட்டும்.........

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ அது எப்ப இருந்தது, இப்ப இருக்கச்?**

**3. கேள்வி:-**

மீண்டும் அவசரகாலச் சட்டம் வந்துவிட்டதே?

**பதில் :-**

பேரின மக்களும் உண்மை ஜனநாயகத்தின் பெருமையை உணர வேண்டாமா?

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎** முற்பகல் செய்யின்.....!

**4. கேள்வி:-**

தமிழ்க் கட்சிகள் ஒன்று சேர்ந்து ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு அறிக்கை சமர்ப்பிக்கப் போகின்றனவாமே?

**பதில் :-** நடந்தால் நல்லதுதான்! நடக்க விடு வார்களா ?

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ நவக்கிரகங்கள் எங்கேனும் ஒன்றுசேருமா? ஹீ....ஹீ... ஹீ....**

**5. கேள்வி:-**

திருவாசக நூல் நமக்கு முழுமையாய்க் கிடைத்தும், மணிவாசகரின் காலத்தை நிச்சயிக்க முடியாமல் நமது ஆய்வாளர்கள் தடுமாறுகிறார்களே ?

**பதில் :-**

நிச்சயித்தால் மட்டும், என்ன செய்துவிடப் போகிறார்களாம்? திருவாசகம் ஆய்வுக்குரிய நூல் அல்ல, அனுபவத்திற்குரிய நூல்! அதனை முதலில் நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ ‘வாரிதியார்ஸ் ஒப்பீனியன் இஸ் கரெக்ற்’ (திருவாசகம் என்னும்) தேனை ஆய்வு செய்து என்ன பயன்? அனுபவிக்க வேண்டியது தான்.**

**6. கேள்வி:-**

பாண் விலை ஏற்றம், சீனி விலை ஏற்றம், எரிபொருள் விலை ஏற்றம் என எல்லாம் ஏறிக் கொண்டே போனால் மக்களின் வாழ்வு என்னாகும் ?

**பதில் :-**

இறங்கிக் கொண்டே போகும்!

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ எது வரைக்குமாம்???**

**7. கேள்வி:-**

நல்லூரானிடம் போகவில்லையா ?

**பதில் :-**

அந்த வருத்தத்தை ஏன் கேட்கிறீர்கள்? அவன் தந்த நிலத்தில் அவனுக்கு அருகிலிருந்தே அவனைத் தரிசித்தவர்கள் நாங்கள். எவருக்கும் தராத அங்கீகாரத்தை எமக்குத் தந்து தன் வீதியில் சொக்கட்டான் பந்தல் அமைத்துக் கம்பன் விழா செய்ய முருகன் தந்த அனுமதியை மறக்கத்தான் முடியுமா? போரால் சோர்ந்திருந்த யாழ் மக்கள் நிமிர்ந்து நின்ற நாள்கள் அல்லவா அவை? தமிழ்க்கடவுளின் காலடியில் இருந்து இரவிரவாகத் தமிழ் கேட்ட அந்த அனுபவத்தை அக்காலத்தில் அங்கு வாழ்ந்த மக்கள் எக்காலத்திலும் மறக்க மாட்டார்கள்.

கந்தனின் காட்சி காணவென எங்கெங்கோ இருந்தெல்லாம் அவனைத் தேடி மக்கள வர, முருகனோ கம்பன் கோட்ட வாயிலில் நிற்கும் எங்களுக்குக் காட்சி கொடுக்க எங்களைத் தேடி வருவான். வேறு எவருக்குக் கிடைக்கும் இந்தப் பேறு? இத்தனை இடர் தாண்டிய பின்பும், எம்மவரை ஏன் முருகன் நிம்மதியாய் தன்னைக் கும்பிட விடுகிறான் இல்லை எனும் கேள்வி மனதை வாட்டியபடி இருக்கிறது. எந்தக் குறையும் இல்லாமல் அவனுக்குத் திருவிழா நடந்தாலும் தன் மக்கள் தன்னோடு இல்லையே என்ற கவலையோடு முருகனும் இருப்பான் என்றுதான் நினைக்கிறேன்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ ‘காக்கக் கடவிய நீ காவா திருந்தக்கால் யார்க்குப் பரமாம் அறுமுகவா?’**

**நம்ம தமிழறிவு எப்பூபூபூடிடிடி...!**



# மீண்டும் மிதக்கும் டைட்டானிக்!

## கிறிஸ்டி நல்லரெத்தினம் - மெல்பன்



(நேற்றைய தொடர்ச்சி)

எங்கும் அழுகையும் கூக்குரலும்!

நடுநிசி 12.05: கப்டன் டைட்டானிக்கின் உயிர் காப்பு படகுகளை கீழே இறக்க உத்தரவிடுகிறார். குழந்தைகளுக்கும் பெண்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படுகிறது. யார் முதலில் படகில் ஏறுவது என்ற இழுபறி ஆரம்பம்.

ஒரு உயிர்காப்பு படகில் 65 பேர் ஏற முடியும். இருந்ததோ 20 படகுகள். இப்பாரிய கப்பலில் 68 படகுகள் இருந்திருக்க வேண்டும். மேலும் படகில் ஏறுவதில் இருந்த இழுபறியினால் பல பாதி நிரம்பிய படகுகள் கடலிறக்கப்படுகின்றன. படகுகளை கப்பலை விட்டு தூர விலகிச் செல்ல தண்டுவலிக்கும் திறமையும் இல்லாமல் இருளில் தவிக்கும் பயணிகள்.

இவர்களுக்கு உதவ கையாலாகாத மாலுமிகள். குளிர் காற்றும் ஜில் என்ற 7°C கடல் நீரும் நீச்சல் தெரிந்தவர்களுக்கும் ஒரு சவாலாகவே இருந்தது.

ஏப்ரல் 15, 1912 காலை 01. 20 : எங்கும் கூக்குரல். கணவனை பிரிந்து படகில் ஏற மறுக்கும் மனைவிகள். வீரிட்டு அழும் குழந்தைகள். படகில் ஏற பரிதவிக்கும் மூன்றாம் வகுப்பு கனவின் காவலர்கள்.

அருகில் இருக்கும் கப்பல்களுக்கு சமிக்கைகள் அனுப்பப்படுகின்றன. டைட்டானிக்கிற்கு மிக அருகில் - 93 கி.மீ. தூரத்தில் - இருந்த RMS கர்பத்தியா செய்தி கேட்டு சம்பவம் நிகழ்ந்த இடத்திற்கு விரைகிறது. ஆனால் அது அங்கு வந்து சேர நான்கு மணி நேரமாவது செல்லும். எங்கும் பனிப்பாறைகள் மிதந்த வண்ணம் இருப்பதனால் எல்லாக் கப்பல்களினதும் வேகம் தடைப்படுகிறது.



அதிகாலை 02.15 : கப்பலின் நீர் புகுந்து கப்பலின் முன்பகுதி கடலில் சாிந்து மூழ்கிறது. கப்பலின் சுமை கூடிய பின் பகுதி இந்த சரிவின் பழுவை தாங்க முடியாமல் இரண்டாக வெடித்து உடைந்து விடைபெறுகிறது.

கப்பலின் முன்பகுதி முதலில் கடலில் மூழ்கி மறைகிறது.

அதிகாலை 2.28 : கப்பலின் பின்பகுதி ஒரு ராட்சத திமிங்கிலம் போல் கடலில் செங்குத்தாக நிமிர்ந்து நின்று பின் நீரைக் கிழித்துக் கொண்டு மூழ்கி மறைகிறது.

'மூழ்க முடியாத கப்பல்' என பெயர் பெற்ற டைட்டானிக்கை மூழ்கடித்த தலைக்கனத்துடன் அட்லாண்டிக் கடலலைகள் ஆர்ப்பரித்து அமைதியடைகின்றன!

எல்லாம் முடிந்தது!

*****

டைட்டானிக்கின் மூழ்கடிப்பு உலக வரலாற்றிலேயே, போர்க் காலங்கள் தவிர்த்து, நடந்த மிகப் பெரிய பயணிகள் கப்பல் அனர்த்தம் எனலாம்.

இக்கப்பலைப் பற்றிய வெளிவந்த ஆராய்ச்சிகளும் ஆவணப்படங்களும் புத்தக வெளியீட்டுகளும் எண்ணிலடங்கா.

இவை எல்லாவற்றிற்கும் மகுடம் வைத்தாற்போல் 1997 இல் வெளிவந்த ஜேம்ஸ் கேமரன் இன் 'டைட்டானிக்' திரைப்படம் இப்பேரிடர் பற்றிய விழிப்புணர்வை உலகின் பல மூலைகளுக்கும் கொண்டு சேர்த்தது.

ஆழத் தோண்டி நீளப் புதைத்து விட்ட சோகங்களை மீளத் தோண்டியெடுத்து காசாக்கினார் ஜேம்ஸ். உலகளாவில் $2.2 பில்லியன் டொலர்களை சம்பாதித்து திரைப் பட வரலாற்றிலேயே 'பில்லியன் டொலர் வசூல்' எல்லையை முதலில் தொட்ட திரைப்படம் என சாதனை படைத்தது.

1998 இல் இத்திரைப்படம் 14 ஒஸ்கார் விருதுகளுக்கு பரிந்துரைக்கப்பட்டு 11 விருதுகளை வென்று குவித்தது.

இத்திரைப்படத்தால் கவரப்பட்ட பலர் 'ஏன் இன்னொரு 'மாதிரி' டைட்டானிக்கை உருவாக்கக் கூடாது?' என்ற முன்னெடுப்பில் இறங்கி அதில் பாதி வெற்றியும் கண்டனர். இதில் இரு முயற்சிகளை இங்கு குறிப்பிடுவது பொருத்தமே.

சீனாவின் சிசுவான் மாகாணத்தில் 260 மீ நீளத்தில் ஒரு பாரிய மாதிரிடைட்டானிக்கை ஸு ஸாஜொன் என்ற செல்வந்தர் கட்டிமுடித்துள்ளார். $153.5 மில்லியன் செலவில் கட்டிய இக் கப்பல் சுற்றுலாப் பயணிகள் கவரும் விதமாகவே அமைக்கப்படுவதால் இது கடலில் மிதக்காமல் அம்மாகாணத்தில் உள்ள Romandisea எனும் 'தீம் பார்க்' இன் அருகில் உள்ள Qijiang ஆற்றில் மிதக்கும். கப்பலின் என்ஜின் நடுக்கத்தை சுற்றுலாப் பயணிகள் அனுபவிக்கும் வகையில் மாதிரி இயந்திரங்கள் வேறு கார்ஜிக்குமாம்!

இக் கப்பலில் ஒரு சொகுசு ஹோட்டல் போல் பயணிகள் இரவில் தங்கிச் செல்ல முடியும். இக்கப்பலிலும் வகுப்பு வாதம் உண்டு. முதல் வகுப்பில் ஐந்து நட்சத்திர ஹோட்டலின் கவனிப்பு!

இது எப்போது சுற்றுலாப் பயணிகளுக்கு திறந்து விடப்படும் என இன்னும் உறுதிசெய்யப்படவில்லை.

1912 அனர்த்தத்தில் உயிர் தப்பிய ஆறு சீனப் பயணிகள் பற்றிய The Six எனும் சீன ஆவணப்படம் இத்திட்டத்திற்கு மேலும் மக்கள் ஆவலை தூண்டியுள்ளது. ஜேம்ஸ் கேமரனால் தயாரிக்கப்பட்ட இப்படம் டைட்டானிக்கின் 109 ஆம் வருட நினைவாக இவ்வருடம் ஏப்ரல் 16 இல் வெளியிடப்பட்டது. கப்பலில் இருந்து உயிர் தப்பிய ஆறு சீனப் பயணிகளின் வாழ்க்கை எப்படி அமெரிக்காவினால் இருட்டடிக்கப்பட்டது என்பதை விளக்கும் ஆவணப் படம் இது. அமெரிக்காவில் 1822 முதல் 1943 வரை அமுலில் இருந்த Chinese Exclusion Act உம் இச் செயல்பாடுகளுக்கு துணை போனது.

இப்படத்தைப் பற்றிய காணொலியை தட்டிப் பாருங்கள் :

https://youtu.be/mlvAtxMCp-0

மாதிரி டைட்டானிக்கை கட்டும் திட்டத்திற்கு எதிர்ப்புகள் இல்லாமலும் இல்லை. ஒரு அனர்த்தத்தில் உயிரிழந்த ஆத்மாக்களுக்கு இது ஒரு அவமதிப்பு என பிரித்தானிய டைட்டானிக் சபைக்கு பல புகார்கள் வந்துள்ளன. எனினும் உயிர்நீத்தவர்களை எந்த விதத்திலும் அவமதிக்காதவாறு செயல்படுவோம் என சொல்கிறார் சீன முதலீட்டாளர் ஸு.

பொறுத்திருந்துதான் பார்ப்போமே.

டைட்டானிக்கின் நினைவுகளை காசாக்குவதில் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த கோடீஸ்வரரான கிளைவ் பாமரும் 2012 இல் ஒரு திட்டத்தை அறிவித்தார்.

'டைட்டானிக் II' எனும் ஒரு மாதிரி. ஆனால் உண்மையில் கடலில் பயணிக்கும் ஒரு கப்பலை $500 மில்லியன் செலவில் கட்டுவதுதான் அத்திட்டம். முழு உலகமே இச்செய்தியை வியப்புடன் வரவேற்றது. ஆனால், சில திரைப்படங்கள் பூஜையுடன் நிற்பது போல் இதுவும் அறிவித்தலோடு சரி!

'வலிமை' அப்டேட் ஆவல் போல் இல்லாது இக் கப்பல் செய்தி பற்றி யாரும் அலட்டிக் கொள்ளவில்லை.

கப்பல் எங்கே கட்டப்படுகிறது எப்போது நிறைவு பெறும் என்ற செய்திகள் இன்னும் இல்லை. கப்பல் கட்ட ஒரு ஆணி கூட வாங்கினார்களா என்பது சந்தேகமே!

மேலும் கிளைவ் அரசியலில் வேறு கால்வைத்து பல கோடிகளை இழந்து காலி கஜானாவுடன் அடங்கிவிட்டார்.

மிதக்கும் முன்னரே மூழ்கிவிட்டது இந்த டைட்டானிக் II.

மேலும் இது பற்றி அறிய 'டைட்டானிக் டட' முகநூலை திறந்து பாருங்கள்.

1,517 உயிர்களை பலிகொண்ட டைட்டானிக் மனித மேம்பாட்டின் வெற்றிச் சின்னமாய் தன் பயணத்தை தொடங்கிற்று. ஆனால், இறுதியில் இயற்கையின் சீற்றத்தின் முன்னால் தன் கன்னிப் பயணத்தை முடிக்காமலேயே ஒரு துரும்பாய் மறைந்து போனது!

உலக சரித்திரத்தில் மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையே உள்ள உறவு என்றும் ஒரு புரியாத புதிர் என்பதில் ஐயமில்லை!





ஆக்கம் - ப்ரியமதா பயஸ்

இந்தவாரம் இவர்

# அம்பர் அலெர்ட் என்ற உலக சட்டத்துக்கு பின்னுள்ள அம்பர் ஹேகர்மேன்




உலக அளவில் தீர்க்கப்படாத ,இன்னமும் குற்றவாளிகளை கண்டுபிடிக்காத மிகப் பெரும் கொடூரச் சம்பவங்களில் கொலைகளில் உலக பிரபலமான கொலை வழக்காக உள்ளது இந்த அம்பர் ஹேகர்மேன் என்ற சிறுமி கடத்தல் சம்பவம் .

அமெரிக்காவின் டெக்சாஸின் ஆர்லிங்டன் எனும் இடத்தில் ஜனவரி மாதம் 13ஆம் திகதி 1996 ஆம் ஆண்டு அன்று, 9 - வயதான அம்பர் ஹேகர்மேன் என்ற சிறுமி தனது சைக்கிளில் ஓடி விளையாடிக் கொண்டிருந்த போது ஒரு வாகனத்தில் வந்தவரால் கடத்தப்பட்டு கொண்டுசெல்லப்படுகிறார். சுமார் நான்கு நாள்களுக்குப் பிறகு, அம்பர் உடல் அவரது வீட்டிலிருந்து 3.2 மைல் தொலைவில் கண்டுபிடிக்கப் பட்டது.

இந்தச் சம்பவம் இன்னமும் முடிக்கப்படாத, குற்றவாளிகளை கண்டுபிடிக்க முடியாத ஒரு துயரச் சம்பவமாக இருக்கின்றது . சிறுமி கடத்தப்பட்ட நாளில் இருந்து நான்காவது நாள் தொண்டை குழி வெட்டப் பட்ட நிலையில் ஒரு வாய்க்காலில் கண்டுபிடிக்கப் பட்டிருந்தாள்.

அம்பர் கடத்தப்பட்ட ஒரே சாட்சி ஜிம்மி கெவில் மட்டும்தான் அம்பரை அவளது சைக்கிளில் இருந்து வலுக்கட்டாயமாக இறக்கி டிரக் வண்டியில் அடைத்துள்ளனர் அதன்போது அம்மா கூக்குரலிட்டு கத்தியுள்ளாள் அவளை கடத்தியவனை காலால் உதைத்தாள் என்று கூறினார்.

அம்பர் கடத்தப்பட்டதைக் கண்ட சிறிது நேரத்திலேயே அவர் பொலிஸை அழைத்தார். அது பயனளிக்கவில்லை. 50 க்கும் மேற்பட்ட பொலிஸ் அதிகாரிகள் மற்றும் கூட்டாட்சி முகவர்கள் அம்பரை தேடிய போதிலும், அவர்கள் அந்த இளைஞரையோ அம்பரையோ உயிருடன் காணவில்லை.

நான்கு நாள்களுக்குப் பிறகு, ஒரு வழிப்போக்கன் கைவிடப்பட்ட வாகன நிறுத்துமிடத்திலிருந்து சுமார் நான்கு மைல் தொலைவில் மழையில் நனைந்து வீங்கிய நிலையில் சிற்றோடை ஒன்றில் இருந்து இனம்கண்டு தெரிவித்தார். அவள் தொண்டை வெட்டப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டாள், ஒரு இடியுடன் கூடிய மழை அம்பர் உடலை சிற்றோடைக்குள் வீசியதாக அதிகாரிகள் நம்பினர், ஏனெனில் அப்பகுதியில் உள்ள அடுக்குமாடி பராமரிப்பு தொழிலாளர்கள் புயலுக்கு முன்பு சாதாரணமாக அங்கே பணியில் ஈடுபட்ட நேரம் அவள் உடலை காணவில்லை என்றே கூறியுள்ளனர் .

கடத்தலால் ஆத்திரமடைந்த ஃபோர்ட் வொர்த் பகுதியில் வசிப்பவர்களில் டயானா சிமோன் என்பவரும் ஒருவர். சிறுவர்கள் கடத்தல் தொடர்பில் குடியிருப்பாளர்களுக்கு அறிவிக்கவும், கடத்தப்பட்ட குழந்தைகளைத் தேடுவதற்கு உதவவும் அவசர எச்சரிக்கை முறை அமுல்படுத்தப்பட வேண்டும் என்று அவர் பரிந்துரைத்தார். அம்பரின் நினைவகத்திற்காக அர்ப்பணிக்கப் பட்ட அத்தகைய ஒரு திட்டத்தை நடைமுறைப்படுத்த சிமோன் கோரினார்.

அமெரிக்காவின் மிஸ்ஸிங் பிராட்காஸ்ட் எமர்ஜென்சி ரெஸ்பான்ஸ் திட்டம் அல்லது 'அம்பர் எச்சரிக்கை திட்டம்' என அழைக்கப்படும் இந்த திட்டம், அந்த ஆண்டின் பிற்பகுதியில் டல்லாஸ் - ஃபோர்ட் வொர்த் பகுதியில் காணாமல் போன மற்றும் கடத்தப்பட்ட குழந்தைகளுக்கான தேசிய மையம் மூலம் நிறுவப்பட்டு நாடு முழுவதும் பரவியது.

இந்தத் திட்டம் நீதித் திட்டங்களின் யு.எஸ். நீதித் துறை அலுவலகத்தின் படி ஏப்ரல் 2019 நிலைவரப்படி, அம்பர் எச்சரிக்கைகள் காரணமாக 957 குழந்தைகள் குறிப்பாக மீட்கப்பட்டுள்ளனர்.

மார்ச் 2019 நிலைவரப்படி, அமெரிக்கா முழுவதும் 83 அம்பர் திட்டங்கள் நடைமுறைபடுத்தப்பட்டு உள்ளன.

ஜனவரி 1 முதல் டிசெம்பர் 31, 2017 வரை, 263 குழந்தைகளை உள்ளடக்கிய யு.எஸ். இல் 195 அம்பர் விழிப்பூட்டல்கள் வழங்கப்பட்டன.

அந்த வழக்குகளில், 193 குழந்தைகள் மீட்கப்பட்டனர் , அவற்றில் 39 அம்பர் எச்சரிக்கை வழங்கப்பட்டதன் நேரடி விளைவாகும். என்று புள்ளிவிவரங்கள் கூறுகின்றன .

யுனைடெட் ஸ்டேட்ஸில், வணிக மற்றும் பொது வானொலி நிலையங்கள், இணைய வானொலி, செயற்கைக்கோள் வானொலி, தொலைக்காட்சி நிலையங்கள், குறுஞ்செய்திகள் மற்றும் கேபிள் டி.வி.வழியாக அவசர எச்சரிக்கை அமைப்பு மற்றும் NOAA வானிலை வானொலி மூலம் அம்பர் விழிப்பூட்டல்கள் விநியோகிக்கப்படுகின்றன (அங்கு அவை குழந்தை கடத்தல் அவசரநிலை என்று அழைக்கப்படுகின்றன அல்லது அம்பர் விழிப்பூட்டல்கள்). எச்சரிக்கைகள் மின்னஞ்சல், மின்னணு போக்குவரத்து நிலை அறிகுறிகள், வணிக மின்னணு விளம்பரப் பலகைகள் அல்லது வயர்லெஸ் சாதனம் எஸ்.எம்.எஸ் உரை செய்திகள் மூலமாகவும் வழங்கப்படுகின்றன.


அம்பர் எச்சரிக்கை தொடர்பான தகவல்களை எப்போதும் வளர்ந்து வரும் மக்கள்தொகைக்கு அனுப்ப அம்பர் எச்சரிக்கை கூகுள், பிங் மற்றும் பேஸ்புக் உடன் இணைந்துள்ளது குடிமக்கள் கூகிள் அல்லது பிங்கில் வரைபட அம்சங்களைத் தேடுகிறார்களோ அல்லது பயன்படுத்தினாலோ அம்பர் எச்சரிக்கைகள் தானாகவே காண்பிக்கப்படும்.

கூகிள் குழந்தை எச்சரிக்கையுடன் (சில நாடுகளில் கூகிள் அம்பர் எச்சரிக்கை என்றும் அழைக்கப்படுகிறது), ஒரு குழந்தை சமீபத்தில் கடத்தப்பட்டு ஒரு எச்சரிக்கை வழங்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட இடத்தில் தொடர்புடைய தகவல்களைத் தேடினால் குடிமக்கள் ஒரு அம்பர் எச்சரிக்கையைப் பார்க்கிறார்கள். இது ஏற்கனவே அமெரிக்காவில் செயலில் உள்ள AMBER எச்சரிக்கை அமைப்பின் ஒரு அங்கமாகும் (ஐரோப்பாவிலும் முன்னேற்றங்கள் உள்ளன). எஸ்.எம்.எஸ். செய்திகள் மூலம் தங்கள் பகுதியில் அம்பர் விழிப்பூட்டல்களைப் பெற சந்தாதாரர்கள், ஆர்வமுள்ளவர்கள் வயர்லெஸ் அம்பர் விழிப்பூட்டல்களைப் பார்வையிடலாம், அவை சட்டத்தால் இலவச செய்திகளாக வழங்கப்படுகின்றன. சில மாநிலங்களில், லொட்டரி முனையங்களுக்கு முன்னால் காட்சி உருட்டும் பலகைகளும் பயன்படுத்தப் படுகின்றன.

ஒவ்வொரு கடத்தல்களையும் விசாரிக்கும் ஒவ்வொரு பொலிஸ் அமைப்பினாலும் (பல சந்தர்ப்பங்களில், மாநில காவல்துறை அல்லது நெடுஞ்சாலை ரோந்து) ஒரு அம்பர் எச்சரிக்கையை அறிவிக்கும் முடிவு எடுக்கப்படுகிறது. ஒரு AMBER எச்சரிக்கையில் உள்ள பொதுத் தகவல் வழக்கமாக கடத்தப்பட்டவரின் பெயர் மற்றும் விளக்கம், கடத்தல்காரன் என சந்தேகிக்கப்படுபவரின் விளக்கம் மற்றும் கடத்தல்காரனின் வாகனத்தின் விளக்கம் மற்றும் உரிமத் தகடு எண் ஆகியவை இருந்தால். தானியங்கி பரஸ்பர உதவி கப்பல் மீட்பு அமைப்புக்கான சுருக்கமாகும். கடலில் அவசரநிலை ஏற்படும் போது விரைவான மீட்பு நடவடிக்கைகளை செயல்படுத்தக்கூடிய கப்பல் இருப்பிட அறிக்கையிடல் அமைப்பு. அமெரிக்காவின் கடலோர காவல்படை நிர்வகிக்கிறது. 1958 இல் நிறுவப்பட்டது. இந்த அமைப்பில் பங்கேற்பது தன்னார்வமானது, மேலும் நீங்கள் துறைமுகத்தை விட்டு வெளியேறும்போது உங்கள் கப்பலின் பெயர் மற்றும் பயணத் திட்டத்தை அம்பர் மையத்திற்கு தெரிவித்தால், நீங்கள் இந்த அமைப்பில் சேர்ந்ததாகக் கருதப்படுகிறது. துறைமுகத்தை விட்டு வெளியேறிய பிறகு, இருப்பிடத்தை சுமார் 15$^{O}$ அட்சரேகை அல்லது தீர்க்கரேகை மாற்றத்தின் இடைவெளியில் புகாரளிக்கவும், துறைமுகத்திற்குள் நுழைவதற்கு முன்பு உடனடியாக புகாரளிக்கவும். அம்பர் சென்டருக்குத் தெரிவிக்கப்பட்ட தரவு கணினியில் சேமிக்கப்படுகிறது, மேலும் அடுத்த முறை நிலை தெரிவிக்கப்படும் வரை கணினி எப்போதும் மதிப்பிடப்பட்ட கப்பல் நிலையை கணக்கிடுகிறது. ஒரு கப்பல் உதவி பெற விரும்பும் போது, அம்பர் சென்டர் கணினியிலிருந்து தகவல்களைப் பெறலாம், அதாவது கப்பல் தனது கப்பலுக்கு அருகில் பயணிக்கும் இடம் மற்றும் ஒரு மருத்துவர் கப்பலில் இருக்கிறாரா என்பது போன்றவை. தரவு கடல்சார் பாதுகாப்புக்கு மட்டுமே பயன்படுத்தப்படுகிறது.

அம்பர் என்ற குழந்தை கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டதற்காக இதுவரை யாரும் பிடிபடவில்லை. இந்த வழக்குதான் அம்பர் அலர்ட் முறையை அறிமுகப்படுத்தியது, இது இப்போது வட அமெரிக்க அளவிலான ஒருங்கிணைந்த அமைப்பாகும், இது ஒரு குழந்தை காணாமல் போகும்போது பொதுமக்களை எச்சரிக்கிறது.



# மட்டக்களப்பு காத்தான்குடியில் ஹெரோயினுடன் 6 பேர் கைது

மட்டக்களப்பு காத்தான்குடியில் ஹெரோயின் போதைப் பொருளுடன் 6 பேரை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நள்ளிரவில் கைது செய்துள்ளோம் என காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து சம்பவதினமான நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணியளவில் காத்தான்குடி பகுதிகளில் உள்ள வீடு ஒன்றினை முற்றுகையிட்டபோது அதில் 6 பேரை ஒரு கிராம் 10 மில்லிக்கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைது செய்தனர். இவ்வாறு கைது செய்தவர்களை நேற்று வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை தொடர்ச்சியாக நாளாந்தம் போதைப்பொருளுடன் 2 பேருக்கு மேற்பட்டோரை பொலிஸார் கைது செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## தனிக் கட்சிகளாகச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவருடைய இல்லத்தில் நேற்று நடந்த ஊடக சந்திப்பில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் பிளவுகள் ஏற்பட்டிருக்கின்றன எனவும், தமிழரசுக் கட்சி தனித்தும் ஏனைய கட்சிகள் தனித்தும் இயங்கப் போவதாகவும் எனவும் வெளியான செய்திகளின் உண்மைத்தன்மை தொடர்பாக ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இது ஒரு பொறுப்பற்ற ரீதியான பிரசாரம். நாங்கள் எல்லோரும் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும். தமிழ் மக்களுடைய விடுதலைப் போராட்டத்தில் நாங்கள் தனித்தனியாகப் பிளவுபட்டு தனித்தனிக் கட்சிகளாகச் செயற்படுவது எங்களைப் பலவீனப்படுத்திவிடும்; எங்களுடைய இலக்கை அடைய முடியாது. கொரோனா நேரத்தில் இவ்வாறான கருத்துக்களுக்கு இடமளிக்கக்கூடாது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் 46/1 என்கின்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஆறு மாதங்கள் கடந்து விட்டன. எதிர்வரும் 13ஆம் திகதி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் இலங்கை தொடர்பாக முக்கியமான உரையாற்றுவார் என எதிர்பார்க்கின்றோம். சர்வதேச நெருக்கடியைச் சமாளிப்பதற்காக அரசு ஓர் பேச்சுக்காக தாங்கள் ஐ.நா. மனித உரிமைகள் சபையுடன் ஒத்துழைப்போம் எனக் கூறுவதை நாங்கள் நம்பி ஏமாந்துவிடக்கூடாது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஆணையாளர், நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பிலும், இலங்கை அரசின் போக்கு குறித்தும், கொடுத்த வாக்குறுதிகள் எந்த அளவுக்கு நிறைவேற்றப்பட்டுள்ளன என்பது தொடர்பிலும் உரையாற்றுவார் எனக் கருதுகிறோம்.

அதையொட்டி தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற தமிழ்த் தேசியத்தை வலியுறுத்தும் கட்சிகளும் ஒன்று பட்டு ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்குப் பின்னர் நடைபெறுகின்ற இலங்கை அரசின் விரோத நடவடிக்கைகள் தொடர்பாக எங்கள் மதிப்பீட்டை நாங்கள் அனுப்ப வேண்டும்.

இது தொடர்பாக இரண்டு விதமான அபிப்பிராயங்கள் காணப்படுகின்றன. ஒன்று கட்சிகள் மத்தியில் நாங்கள் ஒரு நிலைப்பாட்டை அனுப்பி வைப்பது, இரண்டாவது பொது அமைப்புகளிடம் இருந்து கிடைக்கின்ற தகவல்கள் தயாரிப்புகளை மையமாக வைத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சித் தலைவர்கள் கையெழுத்திட்டு ஒரு அறிக்கையை அனுப்பி வைப்பது என்பவையாகும். அநேகமாக அந்த அறிக்கை உருவாக்கப்பட்டிருக்கும்.

அதைவிட கட்சிகளின் சார்பிலே சில அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. நாங்கள் அனைவரும் ஒன்றுபட்டு அனுப்ப வேண்டும் – என்றார்.

## யாழ்.மாவட்டத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமுலில் உள்ள ஊரடங்கு காலத்தில் சமுர்த்தி மற்றும் இதர கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளும் குடும்பங்கள் தவிர்ந்த ஏனைய வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களுக்குத்தலா 2 ஆயிரம் ரூபா வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. இதற்கமைய யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வசிக்கும் 56 ஆயிரத்து 372 குடும்பங்கள் இனங்காணப்பட்டு அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டது.

இவ்வாறு அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டபோது 36 ஆயிரம் குடும்பங்களுக்கான 72 மில்லியன் ரூபா மட்டுமே அனுமதிக்கப்படும் என அரசால் அறிவிக்கப்பட்டது. இதனால் 72 மில்லியன் ரூபாவில் கொடுப்பனவு வழங்கப்படக்கூடிய 36 ஆயிரம் குடும்பங்கள் தேர்வான நிலையில் அந்த எண்ணிக்கையும் சீராக வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேநேரம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நேற்று வரையில் முதல் தடவையாக 36 மில்லியன் ரூபாவும், அதன் பின்பு 18 மில்லியன் ரூபாவும் என 54 மில்லியன் ரூபா கட்டு நிதி மட்டுமே கிடைக்கப்பெற்றமைக்கமைய இதுவரை 27 ஆயிரம் பேருக்கு 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

## இங்கு சர்வாதிகார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிர்வாகத்துறையில் பொறுப்பு வாய்ந்த பதவிகளில் இராணுவ அதிகாரிகளை நியமிப்பது சர்வாதிகார இராணுவ ஆட்சிக்கு வழி வகுக்கும்.

- இவ்வாறு தமிழரசுக் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

அவருடைய இல்லத்தில் நேற்று நடந்த ஊடக சந்திப்பிலே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் ஜனாதிபதி பதவி சர்வாதிகார ஆட்சியை நோக்கிச் செல்லுமென்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தடுப்புக்கு இராணுவத்தைப் பயன்படுத்துவது நல்லது தான். அதேவேளை, எல்லாத்துறையிலும் குறிப்பாக நிர்வாகத்துறையில் பொறுப்பு வாய்ந்த பதவிகளில் இராணுவ அதிகாரிகளை நியமிப்பது சர்வாதிகார இராணுவ ஆட்சிக்கு வழிவகுக்கும்.

நாடாளுமன்ற கட்சித் தலைவர்களையும் மருத்துவ நிபுணர்களையும் சேர்த்து ஒரு தேசிய அமைப்பை உருவாக்கி திட்டங்களை உருவாக்க அரசு தவறிவிட்டது.

கொரோனாத் தொற்றின் திரிபுகள் தீவிரமடைந்து வருவதால் மக்கள் அவதானத்துடனும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றியும் செயற்பட வேண்டும்.

கொரோனா வைரஸ் போல் விலைவாசியும் எகிறியுள்ளது. உழைப்பின்மை, வறுமை, பசி, பட்டினி காரணமாக மக்களுக்கு ஊட்டச்சத்துக்களை வழங்குவதற்கான திட்டங்களை அரசு உருவாக்க வேண்டும். அத்தியாவசியப் பொருட்களைப் பெற்றுக்கொள்ள நீண்டவரிசையில் நிற்பதுடன் அலைந்து திரிகின்ற நிலையும் ஏற்பட்டுள்ளது – என்றார்.

# யாழில் வீடொன்றில் தீ விபத்து; பெறுமதியான பொருள்கள் நாசம்

(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம் – பருத்தித் துறை வீதியில், ஆரியம்குளம் சந்திக்கு அருகாமையில் உள்ள வீடொன்றில் ஏற் பட்ட தீ விபத்தில் பெறுமதியான பொருள்கள் எரிந்து நாசமாகியுள்ளன.

இந்தச் சம்பவம் நேற்று முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்றது.

வீட்டில் சுவாமி அறையில் விளக்கேற்றி விட்டு அங்கு வசிக்கும் பெண் ஆலயம் சென்று திரும்பிய நிலையில் வீட்டிற்குள் தீ விபத்து இடம்பெற்றது என விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் மாநகர தீயணைப்புப் படைக்கு அறிவிக்கப்பட்ட நிலையில் அங்கு விரைந்த அவர்கள் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.



இருந்த போதிலும் வீட்டிலிருந்த பெறுமதியான பொருள்கள் பலவும் எரிந்து நாசமாகியுள்ளன.

# யாழ்.வைத்தியசாலைகளில் கொரோனா சடலங்கள் தேக்கம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளில் அதிகளவிலான கொரோனா சடலங்கள் தேங்கிக் காணப்படுகின்றன என்று யாழ். மாநகர மேயர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தெரிவித்தார்.

கொரோனாத் தொற்றுக்குள்ளாகி இறப்பவர்களின் சடலங்களைத் தகனம் செய்வதற்கு யாழ். மாநகர சபையால் 6 ஆயிரத்து 500 ரூபா கட்டணம் அறவிடப்படுகின்றது. எனினும், குறித்த கட்டணத்தைச் செலுத்த முடியாதவர்கள் யாராவது தனிப்பட்ட முறையில் என்னைத் தொடர்பு கொண்டால் அவர்களுக்கு என்னால் உதவ முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

யாழ். மாநகர ஆளுகைக்குள் உள்ள மின்மயான தகனம் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாகக் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி மரணிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகின்றது.

யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கொரோனாத் தொற்றால் மரணிப்பவர்கள் யாழ்ப்பாணம் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் அமைந்துள்ள மின் தகன மயானத்தில் தகனம் செய்யப்பட்டு வருகின்றனர். இந்த மயானம் யாழ்.மாநகர சபையின் ஆளுகைக்கு உட்பட்டது.

குறித்த மயானத்தில் நாளொன்றுக்கு 5 உடல்கள் தகனம் செய்யப்பட்டு வருகின்றன. எனினும், எதிர்வரும் 8ஆம் திகதிவரை சடலங்களை எரிப்பதற்கான முன்பதிவு செய்யப்பட்டுள்ளது. இதனால் வைத்தியசாலைகளில் அதிகளவிலான சடலங்கள் தேங்கிக் காணப்படுகின்றன.

நாளொன்றுக்கு அதிகளவிலான சடலங்களை எரியூட்டுவதற்கான தகைமை எம்மிடம் இல்லை. அதையும் மீறி நாங்கள் ஒன்று இரண்டு சடலங்களைக் கூடுதலாக எரியூட்டும்போது குறித்த எரியூட்டி அடிக்கடி பழுதடையக் கூடிய சந்தர்ப்பம் காணப்படுகின்றது.

எனவே, எரியூட்டும் தகைமையை அதிகரித்து எமக்கு இன்னுமோர் எரியூட்டியை வழங்குமாறு நாம் சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் கோரிக்கை விடுத்துள்ளோம். குறித்த கோரிக்கை நிறைவேற்றப் பட்டால் நாளொன்றுக்கு அதிகளவிலான சடலங்களை எம்மால் எரியூட்ட முடியும்.

எங்களுக்கு எரியூட்டி வழங்கப்படாவிட்டால் கூட பரவாயில்லை. வேறு ஒரு மயானத்துக்காவது வழங்குங்கள். ஏனெனில் யாழ். மாவட்டத்தில் கொரோனாத் தொற்றால் மரணிப்பவர்களைத் தகனம் செய்ய தற்போது ஒரேயொரு இடம்தான் உள்ளது. இப்போதுள்ள நிலைமையில் இது போதாது – என்றார்.

# ‘சன்ஷைன் சுத்த’ சுட்டுக் கொலை!

பிரபல போதைப்பொருள் வர்த்தகராகக் கருதப்படும் 'சன்ஷைன் சுத்தா' எனப்படும் அமில பிரசன்ன ஹெட்டிஹேவா துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மாத்தறை, வரக்காபிட்டிய பிரதேசத்தில் வைத்து இவர் நேற்றுமுன்தினம் சுட்டுக் கொல்லப் பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தநபர் மாகந்துரே மதூஷுக்கு மிகவும் நெருக்கமான உதவியாளராகச் செயற்பட்டு வந்திருந்த ஒருவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# யாழ்.போதனா பணிப்பாளராக நேற்று மீண்டும் பொறுப்பேற்ற சத்தியமூர்த்தி

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளராக வைத்தியர் தங்கமுத்து சத்தியமூர்த்தி நேற்று காலை மீண்டும் பொறுப்பேற்றார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் பணிப்பாளராகக் கடந்த பல வருடங்களாகச் செயற்பட்டு வந்த வைத்தியர் சத்தியமூர்த்தி மேலதிக கல்வி நடவடிக்கைகளுக்காக வெளிநாட்டுக்குச் சென்றிருந்தார்.

இந்நிலையில், யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளராக நேற்று தனது கடமைகளை அவர் உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்றார்.



# இராணுவம் மற்றும் பொலிஸார் கொக்குவிலில் சுற்றிவளைப்பு!



யாழ்ப்பாணம் - கொக்குவில் பகுதியில் யாழ்.பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரசாத் பெர்னாண்டோ தலைமையில் இராணுவம் மற்றும் பொலிஸாரால் விசேட சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கை நேற்று (வெள்ளிக்கிழமை) மேற்கொள்ளப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் சமீப காலமாக இடம்பெற்று வரும் வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள், அவ்விடங்களில் பதுங்கியிருக்கின்றனர் என இரகசியத் தகவல், யாழ். பொலிஸ் நிலையத்துக்கு கிடைக்கப்பெற்றுள்ளது.

குறித்த தகவலுக்கமைய நேற்று அதிகாலை 4 மணி முதல் காலை 8 மணி வரை நூற்றுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் மற்றும் பொலிஸாரால், கொக்குவிலில் பகுதியின் ஒரு பகுதி சுற்றிவளைக்கப்பட்டு, சந்தேகத்துக்கிடமான வீடுகளில் தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த திடீரென சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது வன்முறைச் சம்பவங்களுக்கு பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஊரடங்கு வேளைகளில் வாள்வெட்டுச் சம்பவங்கள் மற்றும் வன்முறைச் சம்பவங்கள் அடிக்கடி இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மனித உரிமைகளின் உள்நாட்டுப் பொறிமுறை; முன்னேற்றம் குறித்து பீரிஸ் விளக்கமளிப்பு

மனித உரிமைகள் தொடர்பான உள்நாட்டுப் பொறிமுறைகள் மூலமான முன்னேற்றம் தொடர்பாக ஐக்கிய நாடுகள் வதிவிட ஒருங்கிணைப்பாளருக்கு அமைச்சர் ஜி.எல். பீரிஸ் விளக்கம் அளித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் வதிவிட ஒருங்கிணைப்பாளர் திருமதி ஹனா சிங்கர் ஹம்டியை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் கொழும்பில் உள்ள வெளிநாட்டு அமைச்சில் வைத்து சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கான தேசிய அபிவிருத்தி முன்னுரிமைகள் மற்றும் தேவைகளின் பின்னணியில் இலங்கை மற்றும் ஐக்கிய நாடுகள் வதிவிட ஒருங்கிணைப்பாளர் மற்றும் நாட்டுக்கான ஐ.நா. குழு ஆகியவற்றுக்கு இடையேயான ஆக்கபூர்வமான மற்றும் தொடர்ச்சியான ஒத்துழைப்புக்காக ஐக்கிய நாடுகள் வதிவிட ஒருங்கிணைப்பாளருக்கு அமைச்சர் பீரிஸ் நன்றிகளைத் தெரிவித்தார்.

கொவிட் தொற்றுநோயைக் கட்டுப்படுத்துவதற்கான இலங்கையின் தற்போதைய முயற்சிகள் மற்றும் இது தொடர்பாக எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பாகவும் அவர் ஐக்கிய நாடுகள் வதிவிட ஒருங்கிணைப்பாளருக்கு விளக்கினார்.

உலக சுகாதார ஸ்தாபனம் மற்றும் யுனிசெஃப் உள்ளிட்ட ஐக்கிய நாடுகள் சபையின் பணிகளையும், ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கி மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட உதவிகளையும் அவர் மேலும் பாராட்டினார்.

அமைதி, நீதி மற்றும் நிறுவனங்களைக் கையாளும் நிலையான அபிவிருத்தி இலக்கு 16 உட்பட மனித உரிமைகள் மீதான உள்நாட்டுப் பொறிமுறைகள் மூலமான முன்னேற்றம் தொடர்பாகவும் ஐக்கிய நாடுகள் வதிவிட ஒருங்கிணைப்பாளருக்கு அமைச்சர் விளக்கினார்.

ஐ.நாவுடனான அடுத்த 5 வருடங்களுக்கான ஒத்துழைப்புடன் இலங்கையின் முன்னுரிமைகளை உள்ளடக்கிய நிலையான அபிவிருத்தி ஒத்துழைப்புக் கட்டமைப்பு 2023 - 2027 இன் கீழ் இலங்கைக்கும் ஐக்கிய நாடுகள் சபைக்கும் இடையே தயாராகி வரும் செயன்முறை தொடர்பாகவும் ஐக்கிய நாடுகள் வதிவிட ஒருங்கிணைப்பாளர் அமைச்சருக்கு விளக்கினார்.

இது 2030 இல் நிலையான அபிவிருத்தி இலக்குகளுக்காக நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை நோக்கிய ஐக்கிய நாடுகள் நிலையான அபிவிருத்தி ஒத்துழைப்புக் கட்டமைப்பின் இறுதி சுழற்சியாகும்.

அமைதி மற்றும் அபிவிருத்தியை அடைந்து கொள்வதற்கான இலங்கையின் முயற்சிகளின் அனைத்து அம்சங்களிலும் நாட்டுக்கான ஐ.நா. குழுவின் ஒத்துழைப்பை அவர் மீண்டும் வலியுறுத்தினார்.

# கிளிநொச்சியில் கடந்த மாதம் 4,112 பேருக்கு கொரோனாத் தொற்று

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த ஒகஸ்ட் மாதம் மாத்திரம் 4 ஆயிரத்து 112 கொவிட் தொற்றாளர்களும், 30 கொவிட் மரணங்களும் ஏற்பட்டுள்ளன என கிளிநொச்சி பிராந்திய சுகாதார துறையினர் தெரிவித்துள்ளனர்.

சுமார் ஒரு லட்சத்து 46 ஆயிரம் மக்கள் தொகை கொண்ட மாவட்டத்தில் மேற்படி எண்ணிக்கையிலான கொவிட் தொற்றாளர்கள் என்பது அதிகரித்த தொகை என்பதோடு, மரணங்களும் அதிகரித்தே காணப்படுகின்றன எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, மாவட்டத்தின் பிரதான வைத்தியசாலையான கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் மாத்திரம் வைத்தியர்கள், தாதியர்கள், ஏனைய சுகாதாரப் பணியாளர்கள் உள்ளிட்ட சுமார் 45 பேர் வரையான சுகாதாரப் பணியாளர்களும் தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என மாவட்ட வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

எனவே தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்ற போது மட்டுப்படுத்தப்பட்ட வளங்களைக் கொண்டுள்ள கிளிநொச்சி மாவட்டத்தின் சுகாதாரத் துறையினரால் நோயாளிகளை முறையாகப் பராமரிக்க முடியாத நிலை ஏற்பட்டுவிடும். எனவே பொதுமக்கள் மிகுந்த சமூக பொறுப்புடன் கொவிட் சுகாதார நடைமுறைகளைக் கண்டிப்பாக பின்பற்றி நோய் தொற்றிலிருந்து தங்களையும், தங்கள் தங்கள் உறவுகளையும் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்றும் சுகாதாரத் தரப்பு பொது மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

23



வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசாமி கோவில் வருடாந்த உற்சவத்தையொட்டி 'காலைக்கதிர்' நடாத்தும்

# மாபெரும் சைவ சமய அறிவுப் போட்டி - 2021

## போட்டி விதிகள்

1. இந்தப் போட்டியில் ஆர்வமுடைய அனைவரும் பங்குபற்ற முடியும்.
2. 13.08.2021 முதல் எதிர்வரும் 06.09.2021 வரை காலைக்கதிரில் தினமும் வெளியாகும் கேள்விகளுக்குச் சரியான விடைகளை இதே தாளில் எழுதி, கூப்பனிலுள்ள விவரங்களை நிரப்பி அனுப்புவதன் மூலம் போட்டியினுள் நுழையலாம்.
3. சரியான விடைகளை எழுதி அனுப்புவர்களில் இருந்து தினமும் குலுக்கல் முறை மூலம் அந்த நாளுக்குரிய வெற்றியாளர் தெரிவு செய்யப்படுவார். அத்துடன் முழு நாள்களிலும் சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று பேருக்கும் பணப் பரிசில்கள் உண்டு

**பரிசு விவரம் :**

| | |
|---|---|
| முழுப் போட்டிக்குமான முதலாம் இடம் - | ரூபா 7,000.00 |
| இரண்டாம் இடம் - | ரூபா 5,000.00 |
| மூன்றாம் இடம் - | ரூபா 3,000.00 |
| தினசரி வெற்றியாளர்கள் ஒவ்வொருவருக்கும் தலா - | ரூபா 1,000.00 |

4. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் அனுப்பலாம்.
5. பரிசுக்குரியவர்கள் எதிர்வரும் 12.09.2021 அன்று காலைக்கதிர் பத்திரிகை மூலம் அறிவிக்கப்படுவார்கள்.
6. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதாகும்.

**1. முருகப்பெருமான் சிங்கமுகனை வதஞ்செய்த இடம் எதுடு?**

.........................................................................

**2. என்னிருளை நீக்கும் இமையோர்க் கிடர்க்கடியும் பன்னிரு தோட் பாலன் பாதம் எனப் போற்றும் நூல் எது?**

.........................................................................

**3. இலங்கையில் முதன்முதலிற் கொடித்தம்பம் அமைத்து உற்சவம் நடத்திய முருகப்பெருமானின் திருத்தலம் எது?**

.........................................................................

**4. கந்தசஷ்டி கவசத்தை அருளியவர் யார்?**

.........................................................................

**5. நல்லூர் கந்தசுவாமி ஆலய இரதோற்சவத்தின் போது எழுந்தருளும் மூர்த்தி யார்?**

.........................................................................

**சரியான பதில்கள், கூப்பன்களுடன் இணைக்கப்பட்டு தபால் மூலமாகவோ, நேரடியாகவோ கிடைக்கக் கூடியவாறு எதிர்வரும் 10.09.2021 இற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.**

**காலைக்கதிர் - பசுமை ஊடக இல்லம்**
**30, கல்லூரி வீதி,**
**யாழ்ப்பாணம்**

23

பங்குபற்றுபவர்களின் விவரங்கள்:-

1. முழுப் பெயர் : ------------------------------------------------
2. பிறந்த திகதி : ------------------------------------------------
3. கல்வி கற்கும் தரம் : ------------------------------------------------
4. பாடசாலை : ------------------------------------------------
5. முகவரி : ------------------------------------------------

.....................................
கையொப்பம்

காலைக்கதிர் Kalaikkathir

# வைரஸ் பரவலின் தீவிரத்தைக் கட்டுப்படுத்த ஒருமாதம் வரையில் நாட்டை முடக்க வேண்டும்

## ஹரின் எம்.பி. தெரிவிப்பு



நாட்டின் பொருளாதாரம் சீர்குலைந்தால் அதனை மீண்டும் சீர்செய்யமுடியும். ஆனால் மரணிக்கும் உயிர்களை மீண்டும் மீட்டுக்கொண்டுவரமுடியாது. ஆகவே தேவையேற்படும் பட்சத்தில் ஒருமாதம் வரையில் நாட்டை முடக்கி, தடுப்பூசி வழங்கல் உள்ளடங்கலாக வைரஸ் பரவலின் தீவிரத்தைக் கட்டுப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைக் காரியாலயத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு -

நாட்டின் மிகவும் முற்போக்கான அரசியல்வாதிகளில் ஒருவரான மங்கள சமரவீரவின் எதிர்பாராத இழப்பு தொடர்பில் எனது கவலையை வெளிப்படுத்த விரும்புகின்றேன். அவர் இன்று இல்லாவிட்டாலும், கடந்த காலத்தில் தொலைநோக்கு சிந்தனையுடன் அவரால் கூறப்பட்ட விடயங்கள் இப்போது நிதர்சனமான உண்மையாக மாறியிருக்கின்றன.

அந்தவகையில் அவரது எதிர்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்வதற்கு அவசியமான அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாக ஐக்கிய மக்கள் சக்தியின் இளம் உறுப்பினர்களால் கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றமையுடன் அவை விரைவில் நடைமுறைப்படுத்தப்படும். எமது நாடு முன்னேற்றமடைய வேண்டுமெனில் முதலில் எவ்வித இன,மத, மொழி வேறுபாடுகளும் இல்லாத, அனைவருக்கும் பொதுவான நாடாக இலங்கை மாறவேண்டும் என்பதே அவரது எதிர்பார்ப்பாக இருந்தது.

பல்வேறு வளங்களைக் கொண்டிருந்த எமது நாட்டில் அண்மைக்காலத்தில் 'இல்லை, முடியாது' என்ற இரு சொற்களைத் தவிர வேறெதனையும் கேட்கமுடியவில்லை. கல்வி, சுகாதாரம், சீனி, பால் மா, உரம், மருந்துப்பொருள்கள் எதுவுமே இல்லை. அதேபோன்று அன்டிஜன் பரிசோதனை மோசடி தொடர்பில் கண்டறிதல், உயிர்த்த ஞாயிறுதினப் பயங்கரவாதத் தாக்குதல் சூத்திரதாரிகளை வெளிப்படுத்தல், டொலரின் பெறுமதியைக் குறைத்தல் உள்ளிட்ட விடயங்களுக்கு 'முடியாது' என்பதே பதிலாக இருக்கின்றது.

கொரோனா வைரஸ் பரவலுக்கு எதிர்க்கட்சியே பொறுப்புக்கூறவேண்டும் என்று ஆளுந்தரப்பு உறுப்பினர் ஒருவர் கூறுகின்றார். நாட்டை உரிய நேரத்தில் முடக்காமை, தடுப்பூசியை தாமதமின்றி உரிய நேரத்தில் பெற்றுக்கொள்ளாமை, சுகாதாரத்தரப்பினரின் ஆலோசனைகளுக்கு அமைவாக செயற்படாமை உள்ளிட்ட அனைத்தும் எம்முடைய தவறா? இவையனைத்தையும் செய்யத் தவறியவர்கள் யார்? உரிய தருணத்தில் முறையான நடவடிக்கைகளை மேற்கொண்டு கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்குத் தவறிய அரசாங்கம், இப்போது அதன் இயலாமையை மறைத்துக்கொள்வதற்கான எதிர்க்கட்சியின்மீது பழி சுமத்துகின்றது. அரசாங்கம் தற்போதேனும் குறைந்த பட்சம் சுகாதாரப் பிரிவினர் மற்றும் வைத்தியநிபுணர்களின் பரிந்துரைகளுக்கு அமைவாக செயற்பட முன்வர வேண்டும்.

தற்போதும் அரசாங்கத்துக்கு வாய்ப்பிருக்கின்றது. கொரோனா வைரஸ் பரவல் காரணமாக ஏற்பட்டிருக்கும் இந்த நெருக்கடியை விஞ்ஞான ரீதியான செயற்பாடுகள் ஊடாகவே வென்றெடுக்க முடியுமே தவிர, மூடநம்பிக்கைகளின் மூலம் ஒருபோதும் தீர்வுகாணமுடியாது என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும். இல்லை என்றும் முடியாது என்றும் கூறுவதற்காகத் தற்போதைய அரசாங்கத்துக்கு 69 லட்சம் பேர் வாக்களிக்கவில்லை. ஆகவே, இப்போதேனும் அரசாங்கம் அதன் தவறுகளைத் திருத்திக்கொண்டு, கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்பட்சத்தில் அதற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதற்கு நாம் தயாராக இருக்கின்றோம்.

நாட்டின் பொருளாதாரம் சீர்குலைந்தால் அதனை மீண்டும் சீர்செய்யமுடியும். ஆனால் மரணிக்கும் உயிர்களை மீண்டும் மீட்டுக்கொண்டுவரமுடியாது. ஆகவே, தேவையேற்படும் பட்சத்தில் ஒருமாதம் வரையில் நாட்டை முடக்கி, தடுப்பூசி வழங்கல் உள்ளடங்கலாக வைரஸ் பரவலின் தீவிரத்தைக் கட்டுப்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கின்றோம்.

அன்டிஜன் பரிசோதனைக்கான விலைநிர்ணயம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்து தீர்மானங்களை மேற்கொள்வதற்குப் பொறுப்பாக சஜித் பிரேமதாஸ, ஹர்ஷ டி சில்வா, எரான் விக்ரமரத்ன, அநுரகுமார திஸாநாயக்க போன்ற ஊழல்மோசடிகளில் ஈடுபட்டிருக்காதவர்களை உள்ளீர்த்துக் குழுவொன்றை அமைக்குமாறு அரசாங்கத்தைக் கோருகின்றோம். அதனூடாக அனைத்துக் கட்சிகளினதும் பிரதிநிதித்துவத்தை உறுதிசெய்துகொள்ளமுடியும் என்று குறிப்பிட்டார்.

# மன்னாரில் மேலும் 21 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி

## பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் தகவல்

மன்னார், செப். 04

மன்னாரில் புதிதாக 21 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதுடன், ஒரு கொரோனா மரணம் பதிவாகியுள்ளதாக மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் த.விநோதன் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நேற்று (வெள்ளிக்கிழமை) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த அறிக்கையில் வைத்தியர் த.விநோதன் மேலும் கூறியுள்ளவை வருமாறு -

மன்னார் மாவட்டத்தில் புதிதாக 21 பேருக்கு கடந்த வியாழக்கிழமை கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் கொரோனாத் தொற்றுடன் சிகிச்சை பெற்று வந்த மன்னார் முருங்கன் செட்டியார் கட்டையடம்பன் பகுதியைச் சேர்ந்த 67 வயதுடைய வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதன்படி மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 20 ஆக அதிகரித்துள்ளது.

மன்னார் மாவட்டத்தில் இந்த வருடத்தில் மாத்திரம் ஆயிரத்து 704 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். - என்று தெரிவித்தார்.

# சுகாதாரப் பரிசோதகரை தாக்கியவர்கள் விளக்கமறியலில்

கொழும்பு, செப். 04

கிரிபவ சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் சேவை புரியும் பொதுச் சுகாதாரப் பரிசோதகரை தாக்கிய குற்றச்சாட்டில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் 24, 42 வயதுடைய திம்பிரிபொகுன மற்றும் அசோகபுர பகுதிகளில் வசிப்பவர்கள் ஆவர்.

திம்பிரிபொகுன பகுதியில் கொரோனா நோயாளி குறித்த தகவலை சம்பந்தப்பட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பார்க்கச் சென்ற போது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் கிரிபவ பொலிஸாரால் கைது செய்யப்பட்டு கல்கமுவ நீதவான் நீதிமன்றத்தில் வியாழக்கிழமை ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன்போது நீதிவான் அவர்களை செப்டெம்பர் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பித்தார்.

# தென் மாகாணத்திற்கும் விரிவுபடுத்தப்பட்டது தொற்றாளர்களுக்கான குறுஞ்செய்தி சேவை

கொவிட் நோயாளர்களுக்கான குறுஞ்செய்தி சேவை தென் மாகாணத்திற்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களம் அறிக்கை ஒன்றை வெளியிட்டு இதனைக் குறிப்பிட்டுள்ளது.

அதன்படி, கொவிட் -19 நோயாளர்களை 1904 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக சிகிச்சைக்காக அனுப்புதல் மற்றும் வீடுகளில் வைத்து பராமரிக்கும் வேலைத் திட்டம் கடந்த வியாழக்கிழமை முதல் தென் மாகாணத்துக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

கொவிட் தொற்றாளர்களுக்கு சிகிச்சையளித்தல் மற்றும் அவர்களை வீடுகளில் வைத்து பராமரித்தல் மூன்று முறைகளில் மேற்கொள்ளப்படுகின்றது.

கொவிட் தொற்று ஏற்பட்ட நிலையில் சுவாசக் கோளாறு மற்றும் அதனுடன் தொடர்பான சிக்கல் நிலைமைகளுக்கு உள்ளாகும் நோயாளர்கள் துரிதமாக வைத்தியசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படுவர்.

ஏனைய நோய் அறிகுறிகள் கொண்ட நோயாளர்கள் பொருத்தமான சிகிச்சை மத்திய நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவர்.

நோய் அறிகுறியற்ற நோயாளர்கள் வீட்டினுள் வைத்து பராமரிக்கப்படுவர்.

நோய் தொற்றுக்குள்ளான தென் மாகாணத்தில் வசிக்கும் மக்கள் 1904 எனும் இலக்கத்துக்கு குறுஞ்செய்தியொன்றை அனுப்ப வேண்டிய முறை பின்வருமாறு,

01. சுவாசக் கோளாறு மற்றும் அதனுடன் தொடர்பான சிக்கல் நிலைமைகளுக்கு உள்ளாகும் நோயாளர்கள் A (இடைவெளி) வயது (இடைவெளி) பிறந்த திகதி (இடைவெளி) விலாசம்

02. காய்ச்சல் மற்றும் ஏனைய நோய் அறிகுறிகள் காணப்படும் நோயாளர்கள் - B (இடைவெளி) வயது (இடைவெளி) பிறந்த திகதி (இடைவெளி) விலாசம்

03. எவ்வித நோய் அறிகுறியுமற்ற நோயாளர்கள் - C (இடைவெளி) வயது (இடைவெளி) பிறந்த திகதி (இடைவெளி) விலாசம்

இம்மாதம் 19 ஆம் திகதி முதல் மேல் மாகாணத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட இந்தத் திட்டம் மேல் மாகாணத்தில் தொடர்ந்தும் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

# 28 பொலிஸ் அதிகாரிகள் கொரோனாவுக்கு சாவு

இதுவரை நாட்டில் 28 பொலிஸ் அதிகாரிகள் கொவிட் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளனர் எனப் பொது பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

இதேவேளை, 11 ஆயிரத்து 700 பொலிஸ் அதிகாரிகள் கொவிட் தொற்றுக்கு உள்ளாகி உள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மேலும் 40 லட்சம் தடுப்பூசிகளை இலங்கைக்கு வழங்கும் சீனா

கொழும்பு, செப். 04

இலங்கைக்கு மேலும் 40 லட்சம் தடுப்பூசிகளை இன்று வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளதாக சினோபோர்ம் நிறுவனம் அறிவித்துள்ளது.

எனவே இதுவரை இலங்கைக்கு கிடைக்கப்பெற்ற சினோபோர்ம் தடுப்பூசிகளின் மொத்த எண்ணிக்கை 2 கோடியே 20 லட்சமாக உயர்ந்துள்ளதாக சீனத் தூதரகம் குறிப்பிட்டுள்ளது.

அந்தவகையில் தற்போது இலங்கைக்கு வழங்க உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள தடுப்பூசிகள், நாளொன்றில் கிடைக்கும் அதிகளவான தடுப்பூசிகள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.09.2021 இல் வெளியிடப்பெற்றது.